தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

இதற்கென்ன சொல்லுகின்றீர் ?

சுனிதிகுமார் சட்டர்சி
எனும்வடநாட் டுப் பார்ப்பான்,–சொல்லுகின்றான்;
சமற்கிருத உதவி யின்றி
இனிதியங்கா தாம்,தமிழும் ;
அதன்மடியில் வளர்ந்ததுவாம் !
—இதைக்கேட்டே இளிக்கின்றார் தெ. பொ. மீ. யார் !
குனிதொழிலை நன்குசெய்த பெருமை சொல்லி, சட்டர்சி
கொண்டையத்திற் கேற்றுகின்றான், தெ. பொ. மீ.–யை !
இனியென்ன ?
'நடப்பதுநம் தமிழாட்சி' – எனத்தருக்கும்
தமிழர்களே !
இதற்கென்ன சொல்லு கின்றீர் ?

சட்டர்சி போன்றவர்க்கும் தெ. பொ. மீ. போன்றவர்க்கும்,
சாட்டையடி போல் தந்தே,
உடன்முன் நின்று
தட்டியடக் கின்றதிறம் படைத்தவர்கள் இங்கிலரா ?
தன்மானம் உள்ளவர்கள் அற்று போனார் ?
அட்டியிலை; இருக்கின்றார் !
ஆனாலும், வாய்ப்பிலராய் –
ஆள்கின்றார் துணையிலராய் –
முடங்கிப் போனார் !
கெட்டதொரு வாய்ப்பிதுதான் ! நமைநாமே
என்றென்றும்
கெடுத்துவந்த கதையிதுதான் ;
கேட்டுக் கொள்வீர் !

சுவடி: 8 ஓலை: 11-12. விலை 75 காசு.

நமக்கு வந்த மடல்கள்.

0: 242: **தென்மொழி!**

வந்தது தென்மொழி; மண்டு தமிழ்மணத்தைத்
தந்ததுவால்! என்மொழியைத் தந்தேன்காண் - உந்துமென்
உள்ளத துணர்வை யுயிரை உடல்சேர
அள்ளித் தழுவுமால் ஆங்கு!

மொழியடிமை நீக்க முளைத்த கதிராய்ப்
பழிவடவர்ச் சாய்க்கப் படையாய் - வழிதமிழா
என்றிங்கே நாளும் இடிக்குங் கடிமுரசாய்
முன்னின்ற தே,தென் மொழி!

கழிநடையர் வாழ்வுக்கோ கத்தரிக்கோல்; தாளில்
இழிநடையர் வீழ்வுக்கோர் ஈட்டி - கழிசடையாய்
நூலேந்து மேனியர்க்கோ நோயடுதீ; எம்மவர்க்கோ
மேலாந்தாய்ப் பால்,தென் மொழி!

மன்றி லமர்ந்தார்க்கும் மக்கள் நலத்திற்கும்
நன்று யிடித்துரைக்கும் நட்பாகி - ஒன்றுன
செந்தமிழின் பேரால் திருவிடத்தார் ஒன்றுபட
முந்துமுழக் கே,தென் மொழி!

எத்தனையோ கட்சி இதழ்விரித்தும் தாய்மொழியை
எத்துணையும் போற்றுமல் இற்றனவே - மெத்தவொன்றே
மன்றி லமர்ந்ததுவே மாத்தமிழால் இங்கினியாம்
ஒன்றுமிட மே,தென் மொழி!

-முத்தம்-பாளையங்கோட்டை.

0: 243: **வெளியிட வேண்டா...!**

பேரன்பு கெழுமிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களே! வணக்கம் பல. பா. செ. சொ. பி. அ. உருவாக்க வெளியீட்டுத் திட்ட அறிக்கை எண் ஒன்றில் குறிப்பிட்டுள்ள செய்தியனைத்தும் படித்தேன். மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன். ஆயின் இறுதியில் குறிப்பிட்டிருந்த ஒன்று முதலில் களிபேருவகை தந்த தெனினும், ஓரிரு சொற்பகுதிகள் அடுத்து வரும் தென்மொழியில் போலிகையாக வெளியிடப்பெறும் என்பது எனக்கு வருத்தத்தைத் தந்தது. சான்றீர்! தங்கள் தென்மொழிப் பாடல்களை ஒருசிலர் பல மேடைகளில் தாங்கள் பாடிய பாடல்களாகக் கூறிக் கொள்ளுவதை எச்சரித்துக் கண்டித்து இருந்தீர்கள். (பழைய தென்மொழிச் சுவடி ஒன்றில்.) எனவே நீங்கள் வெளியிடும் போலிகைப் படிகளையும் ஒருசில அரைவேக்காட்டு ஆராய்ச்சியாளர்கள் படித்து அதை வைத்துக் கொண்டே தாங்களும் ஆராய்ச்சி செய்து வையாபுரித் தெ. பொ. மீ. கூட்டங்களாகக் கூடி அரசின் துணை பெற்று அகர முதலியைத் தொகுத்து "இதுவே சொற் பிறப்பியல் அகர முதலி" எனவும் கூறத் தொடங்கி விடுவர். ஒன்று கிடக்க ஒன்றை உளறிக் கொட்டிய அகர முதலியை உலகப் பல்கலைக் கழகங்களுக்கும் அதிகார முறையில்

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

தென்மொழி

இலக்கிய இதழ்

''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி: 8 ஓலை: 11-12.

கும்பம்-மீனம். தி. பி. ௨௦௦௨ - (பிப்பிரவரி-ஏப்பிரல். - 1971)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

செ. சொ. பி. அகரமுதலிச் சிறப்பியல்கள்!



காலத்தால் அழியாததும் என்றென்றும் நின்று நிலவுவதுமாகிய நம் தென்றமிழ் மொழிக்கு, இன்றுவரை ஏற்றப்பெற்ற சிறப்புகள் எல்லாவற்றுக்கும் முடி வைத்தாற்போல் விளங்கப் போவதும், விரிவடைந்து வரும் அறிவியல் காலத்திற்கு ஏற்றதும், தமிழ் மொழிக்கு என்றும் காப்பாக நிற்கப் போவதும், இவ்விருபதாம் நூற்றாண்டில் தமிழில் எழுந்தனவும் எழப்போவதுமான அனைத்து நூற்களுக்கும் தலைமை சான்றதாக அமையப் போவதுமாகிய தேவநேயப் பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் சிறப்பியல்கள் அனைத்தையும் எடுத்துக் கூறுவது எவராலும் இயலாத தொன்றாகும். இருப்பினும் நம் தமிழன்பர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் பொருட்டு ஒருவாறு அதன் அமைப்பு முறைகள் சிலவற்றை இங்கு விளக்குவது நம் கடமையாகும்.

அகரமுதலித் தொகுப்பு ஓர் அருங்கலையாகும். மிகுந்த இலக்கண இலக்கிய அறிவும், நூற் பயிற்சியும், பிறமொழி யீடுபோடும் நிறைந்து விளங்கினலொழிய, ஒருவர் அக்கலையில் முற்றும் வெற்றியுறுவ தென்பது முயற் கொம்பே! ஒரு பல்கலைக் கழகமோ, பேராசிரியர் சிலர் சேர்ந்த ஒரு குழுவோ அன்றித் தனிப்பட்ட எவரும் இதில் ஈடுபடுவது பெரும்பாலும் அரிதாகவே இருந்து வந்திருக்கின்றது. எனினும், அத்துறையில் அளவிறந்த ஆர்வமும் அறிவும் அயரா வுழைப்பும் கொண்ட பேரறிஞர் சிலர், தங்கள் வாணுள் முற்றும் முயன்று தொகுத்த அகர முதலிகள் ஆங்கில மொழியிலும் தமிழிலும் ஒருசில உண்டு. மொழித் துறையில் அவர்தம் ஆக்கங்கள் என்றும் தனிப்பெருமை பெற்று விளங்குந் தன்மையன. தாம் எடுத்துக் கொண்ட முயற்சியில் அவர்கள் முழுநிறைவு பெறுமற் போயினும், அவர்களின் தனித்த அறிவு ஆக்கத்திற்கு அறிஞருலகம் என்றும் கடமைப் பட்டுள்ளதை எவரும் மறுத்தற் கியலாது. சிறப்பாகக் குறிக்குமிடத்து, ஆங்கில அகர முதலிகளைத் தம் தனிப்பட்ட முழு முயற்சியைக் கொண்டு தொகுத்த சார்லசு அணன்டேல் (Charles Annandale), சான்சன் (Johnson), சான் ஒகில்வி (John Ogilvie), வெப்சுடர் (Webster), சேம்பர்சு (Chambers) ஆகிய மேனுட்டுப் பேரறிஞர்களும்; நந்தமிழ் நாட்டிற் போந்திருந்து, தமிழ்க் கல்வி கற்றுப், பல்லாண்டுகள் அரிதின் முயன்று, இங்கிருந்த தமிழறிஞர்தம் துணைக் கொண்டு, தமிழ் அகர முதலிகளைத் தொகுத்த புரோயென்கா (Fr. Antem De Proenca-1679), பர்த்தோல் மோகசு சியெசம் பால்க் (Barthol Mocus Ziegembalg.1712) பெசுக்கி (Fr. Beschi - 1749). சோகன் பிலிப் பேப்ரிசியெசு (Johann Philip Fabricias-1779), இராட்லர் (Rottler-1830), போப் (G. U. Pope - 1859), வின்சுலோ (Winslow - 1862), பெர்சிவல் (Percival-), ஆகிய மேலைப் பேரறிஞர்களும்; தமிழகத்தின் பல்வேறு இடங்களிற் பிறந்து நந்தமிழ் மொழியின் ஆக்கத்திற்குப் பெரும்பாடு பட்டுத் தனித்து நின்று தமிழ் அகர முதலிகள் தொகுத்த தமிழ்ப் பேரறிஞர்கள்: கு. கதிரைவேற் பிள்ளை, கா. நமச்சிவாய முதலியார், விசுவநாதப் பிள்ளை, சந்திரசேகரப் பண்டிதர் (யாழ்ப் பாண அகராதி-1878) ஆகியோரும்; உலகம் உள்ளளவும் தம் பெயரொடும் புகழொடும் நின்று நிலவுவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இக்கால், நம் பாவாணர் அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கும் பேரகர முதலியோ, முன்னேர் எவராலும் முயற்சி செய்யப் பெறுததும், அவர்கள் முயன்று தொகுத்து இதுவரை வெளிவந்த அகர முதலிகள் யாவினும் விரிந்ததும், விளக்க முற்றதும், விஞ்சிநிற்பதும், பல்வேறு சிறப்புப் பொருந்தியதும், தனித்தன்மை பல வாய்ந்ததும், முறையே (1) பொருள் விளக்க அகர முதலியாகவும் (2) சொற்பிறப்பியல் அகர முதலியாகவும், (3) சென்னைப் பல்கலைக் கழகமும் பிறவும் வெளியிட்டவற்றுக்கான சீர்திருத்த அகர முதலியாகவும் – விளங்கப் போவதுமாகிய மும்மடியகர முதலியாகும்.

இன்னும் விளங்கச் சொன்னால், சென்னை யகர முதலியிலும் பிற வற்றிலும் இல்லாத ஆயிரக் கணக்கான சொற்களெல்லாம் இயன்ற வரை இதில் இடம் பெறும் எனலாம். அவற்றுள் ஏற்கனவே இடம் பெற்ற சொற்களுக்குக் குறிக்கப் பெறாத பொருள்களெல்லாம் இதிற் குறிக்கப் பெறும். பாவாணரால் ஏற்கனவே (1955-இல்) A Critical Survey of the Madras University Tamil Lexicon என்று ஆங்கிலத்திலும், (1961-இல்) **சென்னைப் பல்கலைக் கழகத் தமி-ழகராதியின் சீர்கேடுகள்** என்று தமிழிலும் வெளியிட்ட நூற்களுள் சுட்டிக் காட்டப் பெற்ற, அறுபாற்பட்ட நாற்பது வகை வழுக்களும் இதன் கண் முற்றத் திருத்தப் பெறும்.

எடுத்துக் காட்டாக, சென்னைப் பல்கலைக் கழக அகர முதலியில் உள்ள வழுக்களாகப் பாவாணரவர்கள் சுட்டிக் காட்டியவற்றுள் சிலவற்றைக் கீழே தருகின்றேன்.

சொற்கள் :	செ. ப. க. அகர முதலியில் குறிக்கப் பெற்ற வடிவம்.	பாவாணரால் திருத்தப் பெற்ற வடிவம்.
சொல் வழு :		
	அரிவாள் மணைப் பூண்டு	அரிவாள் முனைப் பூண்டு
	ஆள் வள்ளி	ஆழ் வள்ளி.
	பொட்டைக் காடு	பொட்டற் காடு.
	அரிவாள்	அறுவாள்.
பொருள் வழு :		
எத்தாப்பு	வஸ்திரம்	மார்பின் குறுக்காக அணியும் மேலாடை.
குக்கல்	நாய்	குள்ள நாய்.
துரிஞ்சில்	வாவல்	சிறுவௌவால்
கேருதல்	கோழி முதலியன கொக்கரித்தல்	கோழி முட்டையிடக் கத்துதல்.
கெத்துதல்	ஷ	முட்டையிட்ட கோழி அடைகாக்கக் கத்துதல்
கொம்மை	பதர்	சிறு கூலங்களின் உமி.
சுவரொட்டி	Liver	மண்ணீரல் (Spleen)
மடற்பனை	ஆண் பனை	பெண்பனை.

அளைமறியாப்புப் பொருள்கோள் என்னும் செய்யுள்முறை மரபுத் தொடருக்குச் சென்னைப் ப. க. க. அ. முதலியில் "பாட்டின் ஈற்றி-னின்ற சொல் இடையிலும் முடிவிலும் சென்று பொருள்

கொள்ளப்படு முறை" என்று விளக்கந் தரப்பெற்றுள்ளது. இஃது, இதைத் தொகுத்த பேராசிரியர்க்கு இழுக்கும், இதைப் படிக்கும் நமக்கு நகைப்பும் விளைப்பதாகும்.

பாவாணர் இதற்குத் தரும் விளக்கம் இது :

"அளைமறியாப்புப் பொருள் கோளாவது, தலை முன்னும் வால் பின்னுமாக வளைக்குட் புகுந்த பாம்பு, அங்ஙனமே திரும்பாது, திரும்பவும் தலை முன்னாக வளைந்து மாறிக் கொள்வது போல், ஒரு செய்யுள் தலைகீழாய் அடியடியாக வெடுத்துப் பொருள் கொள்ளப் படுவது"

இதைப் போலவே **கசகர்ணம்** என்னும் ஒரு சொல்லுக்கும், செ.ப.க.க. அகர முதலியில், (யானை தன் காதை ஆட்டுவது போல்) **'காதாட்டும் வித்தை'** என்றும், 'பெரு முயற்சியால் ஆக வேண்டிய **காரியம்'** என்றும் பொருள் விளக்கந் தரப்பெற்றுள்ளது.

இனி, அதனை அடுத்துள்ள **'கசகர்ணம் போடுதல்'** என்னும் மரபு வினைக்கு, "பெருமுயற்சி செய்தல்" என்று பொருளும், "அவன் அந்த வேலையைப் பெறக் கசகர்ணம் போட்டான்" என்று விளக்கமும் கூறப்பட்டுள்ளன.

பாவாணர் இதனைக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

"கர்ணம் என்பது **கரணம் (Somersault); காதன்று. கசகர்ணம் போடுதலாவது** யானை கரணம் போட்டாற்போல் அரும் பெரு முயற்சி செய்தல். போடுதல் என்னும் வினை கரணத்திற் கன்றிக் காதிற்குப் பொருந்தாமை நோக்குக."

அம்மை வார்த்தல் என்னும் பொருள்படும் 'அம்மை போடுதல்' என்னும் உலக வழக்கு, சென்னைப். ப. க. க. அ. முதலியில் **அம்மை போட்டுதல்** என்று குறிக்கப் பெற்று, **அம்மை புகட்டுதல்** என்று விரிக்கப் பெற்று, **"அம்மைப் பாலைப் புகட்டுதல்"** என்று விளக்கவும் பெற்றுள்ளது. 'வாயில் தருதல்' என்று பொருள் படும் 'புகட்டுதல்' என்னும் சொல், மேல்தோல் வழி உடலுக்குட் செலுத்தும் வினைக்கு எவ்வாறு 'அகராதி'ப் பேராசிரியர்களால் கொள்ளப் பெற்றதோ, நாம் அறியோம்.

இனி, வரிதல்-கட்டுதல் என்னும் வினையடியாகப் பிறந்ததும், விளைந்த விளைவில் முதற்கண் ஆறில் ஒரு பங்கை அரசர்க்குத் தீர்வை யாக எடுத்துக் கட்டி வைக்கும் வழக்கமாக வந்து 'வரிகட்டுதல்'என்ற மரபடியாகத் தோன்றியதுமான இறை என்று பொருள் படும் **'வரி'** என்னும் தூய தமிழ்ச் சொல், 'பலி' (bali) என்னும் வடசொல் மூலத்தினின்று பிறந்ததாகப் பிழையாகவும் குறும்பாகவும் **சென்னைப் பல்கலைக் கழக** அகர முதலியில் காட்டப் பெற்றுள்ளது.

இவை போன்ற பிழைகளையும், மரபு வழுக்களையும், மூல வழுக்களையும் திருத்தவும், செப்பமான மெய்ப் பொருள் விளக்கம் தரவும் மொழி முதறிஞர் பாவாணரைத் தவிர வேறு பேராசிரியர் இலர் என்பதை அவர் எழுதிவரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி வெள்ளிடை மலையாகக் காட்ட விருக்கின்றது.

மேலும், சென்னைப் பல்கலைக் கழக அகர முதலியில் குறிக்கப் பெற்றிருப்பது போல். அயற் சொற்களும் (எ-டு — சேமியம்-கிராக்கி, சவால், சிபார்சு, வசூல், ராசி; சமற்கிருதம் — இருதயம், தந்தம், தருமம், திருப்தி, பிராணி, மேகம், நித்தியம் முதலியவை), வழுச் சொற்களும் ([எ-டு] பொட்டை, அரிவாள், நாழ்[நாள்]முதலியவை) கொச்சை வடிவங்களும் ([எ-டு] ஆப்பை, அப்பளாம், ரேழி, ரொம்ப, சாவல் முதலியவை), தவறுன வடிவங்களும் ([எ-டு] அண்ணாக் கயிறு, இப்பவும், சோத்தாள் முதலியவை) பாவாணரின் செ. சொ. பி. அகர முதலியில் தவறியும் இடம் பெறுவாகையால், அதனைப் படிப்பவர்க்குத் தூய தமிழ்ச் சொற்கள் இவையென்பதும், தவறுக வழக்கிலிருக்கும் சொற்களின் உண்மை வடிவங்கள் இவையென் பதும் தெற்றெனத் தெரியவரும். சொற்களை விளக்க வேண்டிய விடத்துக் காட்டப் பெறும் பல்வகை ஈறுகட்கெல்லாம் பொருளும் பொருட் கரணியங்களும் கூறப்பெறு மாகையால், இற்றை அறிவியல் விரிவிற்கேற்பப் புதுச் சொற்களைப் புணைந்து கொள்ளுதல் மிக எளிதாகவும் பிழையின்றியும் இருக்கும். மொழியாராய்ச்சியில் ஈடுபடுவார்க்கும், அக்கலையை மேன்மேலும் விரிவு செய்வார்க்கும் அந்நிலை பெரிதும் விரும்பப் படுவதாகவும் பெருந்துணையாகவு மிருக்கும்.

இனி, அகர முதலியில் வரும் பொருள் வகைகளும் (Varieties), இன வகைகளும் (Species) ஒரேயிடத்தில் குறிக்கப் பெறுவதால், ஒரு பொருளின் பல பிரிவுச் சொற்களை அறிய எல்லா மடலங்களையும் புரட்டவேண்டுவேதில்லை. விடுபட்டுப் போனவற்றை உடனே அறிந்து கொள்ளவும் இம் முறை உதவும். இதன் வழி ஒருபொருட் பலசொற்களையும் அவை வழங்கு மிடங்களையும் ஒரே சொல்லின் கீழ் அறிந்து கொள்ளவும் முடியும்.

[எ-டு]	நெல்லை.	திருச்சி, சேலம்.	தஞ்சை.	வடார்க்காடு
		கோவை, சென்னை	மரவள்ளிக்	
	ஏழிலைக் கிழங்கு.	குச்சுக்கிழங்கு.	கிழங்கு.	ஆழ்வள்ளிக்
			சவரிக்கட்டை.	கிழங்கு.

இவையன்றி, இவற்றின் ஒவ்வொரு சொல்லும் சொல்வடிவும், அகர வரிசைப்படி அதனதன் இடத்தில் விளக்கப் பெறும் அல்லது குறிக்கப் பெறும். சொல் வடிவ வேறுபாடுகளும் [எ-டு : நா, நாவு, நாக்கு] ஒரே யிடத்தில் குறிக்கப் பெறும்.

மேலும், பாவாணரின் அகர முதலி திரவிடச் சொற்கட்கும் ஆரியச் சொற்கட்கும் தமிழ் மூலங் காட்டி விளக்குவதால், தமிழ்

திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் ஆகும் என்னும் உண்மை தெற்றென வெளிப்படும். வையாபுரி, தெ பொ. மீ. சட்டர்சி ஆகியோரின் சுழிமடமும், கதைப்புரையும், கண்கட்டும் கதிர் முன் பனியெனக் களைந்தொழியும். இதற்கு முன் மறைக்கப்பட்ட தமிழ் வரலாற்றை இவ்வகர முதலி வெளிப்படையாகத் தெரிவிக்கப் போவதால், ஆரிய அடிதாங்கிகள் மண்டைகளின்மேல் இடிதாங்கியது போல் பொய்யுரைகள் முகம் நசுங்கிப் போகும். தமிழ் மொழிக்கண் அறியப் பெற்றுள்ள அனைத்துச் சொற்களும் அவற்றை யொட்டிய எல்லா விளக்கங்களும் இதன் கண் இடம்பெறும். ஆகையால், இஃது ஓர் அகர முதலி போன்றல்லாது ஒரு கலைக் களஞ்சியம் போன்றும் விளங்கி நிற்கும். தமிழின் தொன்மை, முன்மை, தாய்மை, தூய்மை, இளமை, வளமை, இனிமை, தனிமை முதலிய பண்புகளை யெல்லாம் விளக்க வந்த பெரும் பொருட் கருவூலமாக இது திகழும் என்பதில் துளியும் ஐயமில்லை. இதன்வழிக் குமரிநாட்டு வரலாறு மெய்ப்பிக்கப் பெறுவதோடு, தமிழ் வடமொழிப் பிணிப்பினின்று அறவே மீட்கப்பெற்றுத் தமிழன் முன்னேற்றத்திற்கு அது பெரிதும் இன்றியமையாததென உணர்த்திக் காட்டப் பெறும்.

சென்னைப் ப. க. க. அகர முதலியோ தமிழைக் கெடுக்கவேண்டு மென்ற நோக்கத்தோடே பெரும்பாலும் பிராமணப் புலவரால் தொகுக்கப்பட்டது. இனி, அதனை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப் பெற்ற பரோ. எமனோ திரவிடச் சொற்பிறப்பியல் [அது சொற்பிறப் பியல் முறையால் தொகுக்கப் பட்டதே அன்று] அகர முதலியும் தமிழ் மொழிக்கு எள்ளளவும் பயன்படப் போவதில்லை. பேராசிரியர்கள் பரோவும் எமனோவும் வடமொழிக்குப் பின் தமிழைக் கற்றவர்கள்; ஆங்கில வழியாகத் தமிழ் மொழியை அறிந்தவர்கள். தெ. பொ. மீ. முதலிய ஆரிய அடிமைகளின் நூற் கருத்துகளைத் தவிர மறைமலையடிகள் வழிப் பேராசிரியர்களையும், பாவாணர் வழி ஆராய்ச்சியறிஞர்களையும் அறவே அறியாதவர்கள்.

பரோவின் சொற் பிறப்பியல் அகர முதலியில் 'தோட்டம்' என்னும் சொல்லுக்குத் 'தோண்டு' என்று மூலங்காட்டப்பட்டுள்ளது.

தோண்டு – தோட்டம் என்பது தவறு.
தோடு – திரட்சி. தோடு – தோட்டம்.
ஒ. நோ : தொகுப்பு – தோப்பு.

– என்பது பாவாணர் ஆராய்ச்சி.

அதுபோலவே ஆயிரம் என்னும் சொல்லும் 'ஸகஸ்ர' என்னும் வட சொல்லினின்று பிறந்ததாகக் காட்டுவார் பரோ.

அயிர் – நுண் மணல். அயிர் – அயிரம் – ஆயிரம்.

ஆற்று மணலும் கடற்கரை மணலும் ஏராளமாயிருப்பதால் மணற்பெயர் ஒரு பெருந்தொகைப் பெயராயிற்று, என்பதும், 'ஸகஸ்ர' என்னும் சொல் மூலம் வடமொழியில் இல்லை என்பதும் பாவாணர் கருத்து. (பாவாணரின் 'வடமொழி வரலாற்றைப்' பார்க்க).

இனி, பாவாணர் எழுதிக் கொண்டிருக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் அத்தனைச் சிறப்பியல்புகளையும் தென்மொழியின் முதலெட்டு ஆசிரியவுரைப் பக்கங்களிலேயே எடுத்துக் கூறி விடுவது என்பது கடலைக் கையால் அள்ளுவது போன்றதொரு செயலே. தொடக்கத்தில் அகர முதலி ஐந்து மடலங்களில் முடியும் என்று கருதப்பட்டது. இக்கால் பத்து மடலங்களாக விரியும் என்று கணிக்கப் படுகின்றது. அவை, 1. உயிர் முதற்சொற்கள். 2 ககர முதற் சொற்கள். 3. சகர முதற் சொற்கள். 4. தகர முதற் சொற்கள். 5. நகர முதற் சொற்கள். 6. பகர முதற் சொற்கள். 7. மகர முதற் சொற்கள். 8. யகர வகர முதற் சொற்கள், 9. பாயிரம். 10. பின்னிணைப்பு என்பனவாகும். அவற்றுள் முதல் மடலத்தில் வரும் அகரம், அவரை, இஞ்சி என்ற மூன்று சொற்களுக்கும் செ. சொ. பி. அகர முதலி அமைப்புப்படி இந்தத் தென்மொழியிதழில் விளக்கங்கள் தரப்பெற்றுள்ளன. அடுத்த இதழிலும் இரண்டு மூன்று சொற்களுக்கு விளக்கங்கள் வரலாம். இவற்றைப் பார்த்த பின்றான், பாவாணர் தொகுக்க விருக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி என்பது எப்படி யிருக்கும் என்று பேராசிரியர்களுக்கே விளங்கும். ஓரீர் அன்பர்கள் பாவாணர் மேல் வைத்த நம்பிக்கையாலும், நம் பேராசிரியர்கள் மேல் வைத்த நம்பிக்கையின்மையாலும் இதுபோலும் போலிகைச் சொற்களை வெளியிட வேண்டா என்று கேட்டுக் கொண்டிருந்தும், அவை வெளியிடப்பட்டிருப்பது, பாவாணரவர்கள் தம் அறிவின் மேல் தாம் வைத்த நம்பிக்கையைக் கட்டியங் கூறிக் காட்டவே ஆகும். பட்டந்தாங்கி யாசிரியர்கள் அவரவர் பட்டங் களுக் கேற்ப வேறு வேறு துறைக் கல்வியர் ஆவர், மற்று. பண்டாரகர் [Dr] பட்டம் பெற்ற தமிழ்ப் பேராசிரியர்களோ தம்தம் இடுநூல் [Thesis] பொருள் பற்றியே பேசத் தகுதியுடையவராவர். எனவே அகர முதலித் தொகுப்பிற்குத் தேவையான அனைத்துத் திறனும் ஒருங்கே பெற்றவர்கள்போல் பாவணரின் மொழியாய்வுபற்றிக் கருத்தறிவிப்பதும், அகர முதலித் தொகுப்பு ஒரு குழுவினர் கூடிச் செய்யத் தக்கதென்று பரிந்துரைப்பதும், பந்திக்கே தகுதியற்றவன் இலைபொத்தல் என்று கூக்குரல் இடுவதைப் போன்றதாகும். அகர முதலித் தொகுப்பிற்குக் குழு அமைத்தல் வேண்டும் என்பது அறியாமையும் அழுக்காறும் பற்றிய இருட்டடிப்பும் ஏமாற்றும் ஆகும். மொழியாராய்ச்சியினும், சொல்லாரய்ச்சியினும் மொழிஞாயிறு பாவாணருக்குத் தங்களை ஒப்பாராகவோ மிக்காராகவோ, கருதிக்கொண்டிருக்கும் பேராசிரியர்களோ, அவர்களைச் சார்ந்தவர்களோ தென்மொழியில் வெளியிடும் போலிகைச் சொற்கள் போல், நாம் கூறும் ஓரிரு சொற்களுக்காகிலும் சொற்பிறப்பியல் முறையில் பொருள் எழுதித் தர முடியுமா என்று அறைகூவிக் கேட்கின்றேன். அல்லாக்கால் அவர்கள் ஏன் குழுவென்றும் கூட்டமென்றும் வாய்ப்பறை யறைந்து தங்கள் தகுதிக்குறைவை வெளிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அரசினரின் ஊமைத்தனத்தாலோ அல்லது பேராசிரியர் சிலரின் விடணத் தன்மையாலோ எத்தனைக் காலம் எத்தனையவரால்

மறைக்கப்பெற்றாலும், உண்மை யறிவு என்றேனும் ஒருநாள் வெளிப்பட்டேதீரும் என்பதை அனைவரும் உணரக் கேட்டுக் கொள் கின்றேன். எண்ணெயும் உண்மையும் இறுதியில் மிதந்தே தீரும் (Oil and Truth Come upper most atlast) என்பது பழமொழி.

இந்நிலையில் பாவணரின் மொழியாய்வுத் தகுதியை நான் அளவிறந்து பாராட்டுவதாக எவரும் கருதி விடக் கூடாது. அவரின் மொழியறிவை அறிந்துகொள்ளும் ஓரளவு தகுதி படைத்தவனேயன்றி ஆய்ந்து அளவு காணும் தகுதி எனக்கில்லை என்பதை நான் நன்கு அறிவேன். மொழித்துறையில் பாவணர் அரை நூற்றாண்டைக் கழித் தவர். என் அகவையினும் பத்தாண்டை அதில் தாண்டியவர். ஆனால் ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுகள் அவரைநெருங்கியறிந்தவன் எனும் உரிமையால் அவர் மொழியறிவுத் திறத்திற்கு எதிர் நிற்க எவரேனும் உளரா என்று அறைகூவல் விடுக்கின்றேன். இல்லையேல், அவர் அறி வுக்கு வழியமைத்துக் கொடுங்கள் என்று வேண்டிக் கொள்கிறேன்; இயலவில்லையானால் அவர் ஆக்கத்திற்கேனும் வழிவிட்டு ஒதுங்கிக் கொள்ளுங்கள். அகரமுதலி தொகுப்பதற்கான முழுத்திறமும் அவரிடம் உண்டு.1924-இலேயே பண்டிதப் பட்டம்பெற்றவர் அவர். அக்காலத்தில் பாடங்கள் மிகவும் பேரளவின. நாட்டார் ஒருவரே இவர்க்கு முன் அப் பட்டம் பெற்றவர். சொல்மூலம் மொழிமூலம் காணற்கு வேண்டிய அள விறந்தஆராய்ச்சி அறிவையும், அமைதியையும் பெற்றவர் பாவாணர். ஆராய்ச்சி யாளருக்கு இன்றியமை யாதனவாக அவரே குறிப்பிடும் மதிநுட்பம், பரந்த கல்வி, நடுநிலைமை, அஞ்சாமை, தன்னலமின்மை, மெய்யறியவா ஆகிய அறுதகுதிகளையும் சிறிதும் நெகிழ்ச்சியின்றித் தாமே பெற்ற பேரறிஞர் பாவாணர்.பாண்டி நாட்டுச் சொல் வளத்தை யும் சோழ, கொங்கு நாட்டு வழக்கு வேறுபாட்டையும் நன்கு அறிந்த அவர் போல் வேறு எவரையும் இற்றைத் தமிழகத்தில் காணுதல் இய லாது. ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகர முதலிகளை இவர்போல் ஊன்றிப் படித்தவர் ஒருவராகிலும் இருப்பாரா என்பது ஐயமே. மேலும் இறைவனால் இத்துறைக் கென்றே படைக்கப் பெற்றவர் போல் அவர் பேச்சும், மூச்சும், இன்பமும், துன்பமும், வாழ்வும் வளமும், எல்லாமும் தமிழ்மொழி ஒன்றே எனக் கருதிக் கிடக்கும் இப் பெறற்கரிய பேரறி ஞரைப் பெற்றதால் பெருமை பெற்றதிந் நிலம் என்று சொல்வது பிழை யாகாது. பீடு சான்ற அவரைப் பேணிக் கொள்ளத் தெரியாமல் மூட்டுக்கல் போல் நின்று முரண்டு பிடிக்கும் அரசும் அரசன்று; அறிஞரும் அறிஞரல்லர். எனவே, அன்பர்கள் அனைவரும் பாவாணர் அவர்கள் உருவாக்கி வரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிக்குப் பல் லாற்றாலும் துணை நிற்பதுடன், அவர் எடுத்த பணி முட்டுப்பாடின்றி நிறைவேற எல்லாம் வல்ல இறைப் பேரருளை வழுத்தி நிற்பாராக.



தேவநேயன் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

உருப்படி யொழுங்கு
(The Order in the arrangement of an Article)

I. பெயர்ச்சொல் - Noun

1. சொல் – The word
2. எழுத்துப் பெயர்ப்பு – Transliteration
3. வழக்கிடம் – Provenance or Region of currency
4. வேறிட வழக்குச் சொல் – Synonyms and their localities.
5. வடிவு வேறுபாடு – Variants
6. இலக்கணச் சொல்வகையும் உட்பிரிவும் — Word-class, (Part of Speech) and Sub.division
7. வேற்றுமைப் பாட்டு வகை — Mode of Declension

   [1] இயல்பு, [2] சாரியைப் பேறு, [3] அடிகுறுகல், [4] அடிகுறுகலும் சாரியைப் பேறும்.
8. இயல்வரையறையும் (Definition) பொருட்பாடும் (Meanings) மேற்கோளும் (Quotations) விளக்கத் தொடரும் (Illustrative expressions)

   [1] தலைப்புச் சொல் — Parent word

   [2] திரிசொல் — Derivative

   [3] கூட்டுச் சொல் — Compound word

   [4] கூட்டுத்திரி சொல் — Parasynthetic Compound

9. இனமும் வகையும் — Species and Varieties,
10. மரபுவழக்கு — Idioms and Usages
11. இணை மொழி — Words in Pairs.
12. மரபுத் தொடர்மொழி — Idiomatic phrases
13. பழமொழி — proverbes and bywords
14. சொல் வரலாறு — Etymology (Origin and derivation)
15. இனச்சொல் — Cognates and Allid words.
    [1] திரவிடம்
    [2] ஆரியம்
    [3] பிறமொழி
16. சிறப்புக் குறிப்பு — Special Notes.
17. சென்னை யகர முதலித் திருத்தம் — Correction of errors in the Lexicon.

சென்னை யகர முதலியென்றது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகர முதலியை (The Madras University Tamil Lexicon).

மேற்குறித்த பதினாறு குறிப்புக்களும் எல்லா வுருப்படிகளிலும் அமையா; சிலவற்றில் ஒன்றும் பலவுங் குறைந்திருக்கும். இது வினைச் சொற்கும் இடைச்சொற்கும் ஏற்கும். இலக்கணச் சொல்வகை மூன்றே யென்பது சொல் வகை என்னும் உருப்படியில் விளக்கப் பெறும்.

வேற்றுமைப்பாடு என்பது பெயர்ச்சொற்கே யுரிய சிறப்பியல் பாம். அதன் நால்வகையுள், சாரியைப் பேறு என்பது, (1) தனிச் சாரியைப் பேறு, (2) கூட்டுச் சாரியைப் பேறு, (3) 4-ஆம் வேற்றுமைச் சாரியைப்பேறு, (4) பலவேற்றுமைச் சாரியைப்பேறு என நான்கு உட்பிரிவுகளை யுடையது.

2. வினைச் சொல் - Verb

1. சொல் — The word
2. எழுத்துப் பெயர்ப்பு — Transliteration
3. வழக்கிடம் — Provenance or Region of Currency
4. வேறிட வழக்குச் சொல் — Synonyms and their localities
5. வடிவு வேறுபாடு — Variants
6. இலக்கணச் சொல்வகையும் உட்பிரிவும் — Word-class (Part of Speech) and Sub-division
7. புடை பெயர்ச்சி வகை — Mode of Conjugation
8. இயல் வரையறையும் (Definition) பொருட்பாடும் (Meanings) மேற்கோளும் (Quotations) விளக்கத் தொடரும் (Illustrative expressions).

   [1] தலைப்புச் சொல் — Parent word
   [2] திரிசொல் — Derivative
   [3] கூட்டுச் சொல் — Compound word
   [4] கூட்டுத் திரிசொல் — Parasynthetic Compound

9. மரபுவழக்கு — Idioms and Usages

   [1] பெயரெச்சம் — Adjectival Participle
   [2] வினையெச்சம் — Adverbial Participle
   [3] வினை முற்று — Finite Verb
   [4] வினையாலணையும் பெயர் — Participial Noun
   [5] { செயற் பெயர் — Gerund
   வினைப் பெயர் — Verbal Noun
   தொழிலாகு பெயர் — }

10. தொடர் மொழி — Idiomatic Phrases
11. பழமொழி — Proverbs
12. சொல் வரலாறு — Etymology (Origin and derivation)

13. இனச் சொல் — Cognates and Allied words
    [1] திரவிடம்
    [2] ஆரியம்
    [3] பிற மொழி
14. சிறப்புக் குறிப்பு — Special Notes
15. சென்னை யகரமுதலித் திருத்தம் — Correction of errors in the Lexicon.

பெயர்ச்சொற்கு வேற்றுமைப்பாடு போன்று வினைச் சொற்குப் புடைபெயர்ச்சி சிறப்பியல்பாம். அது 24 வகைப்பட்டது. அவ்வகையெல்லாம் செ. சொ. பி. அகரமுதலிப் பாயிரத்திற் காட்டப் பெறும்.

3. இடைச் சொல் — Indeclinables

1. சொல் — The word
2. எழுத்துப் பெயர்ப்பு — Transliteration
3. வழக்கிடம் — Provenance or Region of Currency
4. வேறிட வழக்குச் சொல் — Synonyms and their localities.
5. வடிவு வேறுபாடு — Variants
6. இலக்கணச் சொல்வகையும் உட்பிரிவும் — Word-class (Part of Speech) and Sub-division.
7. இயல்வரையறையும் (Definition) பொருட்பாடும் (Meanings) மேற்கோளும் (Quotations) விளக்கத் தொடரும் (Illustrative expressions)
    [1] தலைப்புச் சொல் — Parent word
    [2] திரிசொல் — Derivative
    [3] கூட்டுச் சொல் — Compound word
    [4] கூட்டுத் திரிசொல் — Parasynthetic compound
8. சொல் வரலாறு — Etymology (Origin and derivation)
9. இனச் சொல் — Cognates and Allied words
10. சிறப்புக் குறிப்பு — Special Notes
11. சென்னை யகர முதலித் திருத்தம் — Correction of errors in the Lexicon.

போலிகை யுருப்படிகள் (Specimen Articles)

I. அ [எழுத்தும் சொல்லும் / சொல்லுறுப்பும் குறியும்.]

௧. எழுத்து

அ[1] a. பெ. n. தமிழ் நெடுங் கணக்கின் முதலெழுத்து; First letter of the Tamil alphabet.

வகை. உயிர்க்குறில்; Short Vowel.

வேற்றுமைப்பாடு. 2-ஆம் வகை, 3-ஆம் பிரிவு. எ டு: அவ்வை, அவ்வால், அவ்விற்கு, அவ்வின், அவ்வது, அவ்வில்.

௨. சொல்

அ[2] a. பெ; n. 1, அழகு; Beauty. "அவ்வாய் வளர்பிறை சூடி" (பெரும்பாண்.412), 2. சிவன், Siva. "ஆரு மறியா ரகார மவனென்று" (திருமந். 1751). 3. திருமால் Vishnu "அவ்வென் சொற்பொரு ளாவான்" (பாகவ. சிசுபா, 20). 4. நான் முகன், Brahma. (தக்கயாகப். 65, உரை), 5. சுக்கு; Dried ginger. (பரி. அக.). 6. திப்பிலி; Long pepper. (பரி. அக)

அ[3] a, பெ. எ; adj. புறச்சுட்டு: Demon. Prefix: அ=அந்த. 1. சேய்மைச்சுட்டு; Pref. to nouns, expressing remoteness. எ.டு: அப்பையன். 2. முற்பெயர்ச்சுட்டு; Pref. to nouns, referring to their antecedents. எ-டு. பண்டைத்தமிழகத்தை ஆண்டவர் சேர சோழ பாண்டியர். அம்மூவேந்தரும் இன்றில்லை. 3. உலகறி சுட்டு; Pref. expressing world-wide eminence. 'அத்தம் பெருமான்' [சீவக 221]

௩. சொல்லுறுப்பு [இ; ind]

அ[4] a, அகச்சுட்டு: Demon. base: முதனிலை-1. சேய்மைச் சுட்டு; Base of the dem. pron. expressing the remote person or thing. எ-டு: அவன், அங்கு, அன்று. 2. முற் பெயர்ச் சுட்டு; Base of the dem. pron. referring to its antecedent. எ-டு: ஒரூரில் ஓரரசன் இருந்தான். அவனுக்கு இரு மக்கள். 3 உலகறி சுட்டு: Base of the dem. pron expressing world-wide eminence. எ-டு: "அவனன்றி

அணுவும் அசையாது" [பழமொழி]. 4. பொது நிலைச்சுட்டு[3] Base of the dem. pron. expressing generality or indefiniteness. எ-டு; "அவரவர் அக்கறைக்கு அவரவர் பாடு படுவார்" [பழமொழி].

அ[5] a. இன்மை யன்மை மறுதலைப் பொருளில் வரும் முன்னொட்டு. Pref. implying negation, privation or contrariety.

எ-டு: இன்மை — அவலம்=வலம் இல்லாதது [துன்பம்], துயரம்.

அன்மை — அகாலம்=காலம் அல்லாதது.

மறுதலை — அசுரன் =சுரனுக்கு மாறானவன்.

அ[6] a. ஒரு சொற்சாரியை; A euphonic augment எ-டு: வண்ணாரப்பேட்டை.

அ[7] a. மெய்யெழுத்துச் சாரியை; An enunciative augment. எ-டு: க.

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்."

(தொல். 46)

"வல்லெழுத் தென்ப கசட தபற" (ஷை. 19)

அ[8] a. ஓர் அசைச்சொல்; An expletive generally in poetry. எ-டு: "தன்வழிய காளை" [சீவக. 494].

அ[9] a. ரகரத்தில் தொடங்கும் சில சமற்கிருதச் சொற்களின் முன்னொட்டு; Euphonic prothesis of some Sanskrit words beginning with ர. எ-டு: ரத்த — அரதனம்.

அ[10] a. இரக்கம், வியப்பு, துயரம் முதலியன உணர்த்தும் ஒரு குறிப்புச் சொல்லுறுப்பு; A part of an interjection expressing pity, wonder, grief etc.

"உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் — கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அ ஆ
இழந்தானென் றெண்ணப் படும்" (நாலடி. 9).

என்னுஞ் செய்யுளில் 'அ ஆ' இரக்கப் பொருளில் வந்தது.

அ[11] a. ஒரு பலவின்பாற் பெயரீறு; A neut. pl. noun Suf. எ-டு: சில. பல.

அ[12] a. ஆறும் வேற்றுமை அஃறிணைப் பன்மை யுருபு Genitive neut. pl. ending எ-டு: என கைகள்.

அ[13] a. ஒரு பலவின்பால் வினைமுற்றீறு ; A neut. pl. verbal ending. எ-டு: வந்தன. வந்த. பெரியண. பெரிய.

அ[14] a. ஒரு வியங்கோள் வினையீறு ; An opt. verbal ending. எ-டு: வரப்புயர. வியங்கோள் வினையெல்லாம் முற்றே.

அ[15] a. இறந்தகால நிகழ்காலத் தெரிநிலைப் பெயரெச்ச வீறு A rel. participial ending.எ-டு: வந்த, வருகின்ற.

அ[16] a. ஒரு [குறிப்புப்] பெயரெச்ச வீறு; An adj. ending எ-டு, நல்ல, சிறிய.

அ[17] a. ஒரு நிகழ்கால [எதிர்காலப் பொருட்டு] வினையெச்ச வீறு; An infinitive suf. எ-டு: உண்ண.

அ[18] a. ஒரு சொல்லாக்க ஈறு; Formative particle. எ-டு: குல்—கல்—கல, பிள்—பிள.

அ[19] a. சில பெயர்களின் ஆகார வீற்றுக் குறுக்கம்; Shortening of 'aa' ending certain nouns. எ-டு: இரா—இர, களா—கள, நிலா—நில—,புறா—புற.

அ[20] a. குறிலில் இறும் வண்ணப்பாட்டுச் சீர்களின் அல்லது அசைகளின் வண்ணக் குழிப்பு வாய்பாட்டீறு; Ending of rhythmatic patterns of metrical feet and syllebles ending in a short vowel. எ-டு: தன, தனன, தான, தத்த, தந்த, தய்ய, தனத்த, தனந்த.

அ[21½] a. நெடுங்கணக்குப் பெயருறுப்பு; Part of a name of the alphabet. 'அ-ஆ' = நெடுங்கணக்கு. எ-டு : உனக்கு 'அஆ' தெரியுமா ? இதை 'அ'ன 'ஆ'வன்ன என்றது பண்டை வழக்கு.

௪. குறி

அ[22] அ. 1. எட்டு என்னும் எண்ணின் குறியாக 'அ'எனச் சுழியின்றி எழுதப்படுவது; Symbol of the number eight, written without the loop.

2. ஐம்புள்ளுள் [பஞ்சபட்சியுள்] ஒன்றான வல்லூற்றைக் குறிக்கும் எழுத்து; Letter representing the vulture one of the five astrologically important birds.

வரலாறு

க. எழுத்து-ஆ-அ[1]. அகரம் ஆகாரத்தின் குறுக்கம். உயிரொலிகளெல்லாம் பெரும்பாலும் இயற்கையாக நெடிலாகவே தோன்றிப் பின்பு குறுகின. இதன் விளக்கத்தை நெடுங்கணக்கு என்னும் உருப்படியிற் காண்க.

உ. சொல்-அம் = அழகு. அம்-அ[2].

அ[2] = எழுத்துகட்கு முதலாகிய அகரம் போல் உலகங்கட்கு முதலாகிய இறைவன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு." [குறள். 1.]

இறைவனைக் குறிஞ்சி நிலத்துச்சேயோன் வழிபாட்டினர் சிவன் என்றும், முல்லை நிலத்து மாயோன் வழிபாட்டினர் திருமால் என்றும், குறித்தனர். கி. மு. 1500-ஆம் ஆண்டுபோல் நாவலந்தேயத்திற்குட் புகுந்த சிறு தெய்வ வேள்விமத ஆரியர், சிவநெறியும் திருமால் நெறியும் ஆகிய இரு தூய தமிழ மதங்களையும் ஆரியப்படுத்தற்கு முத்திருமேனிக் (திரிமூர்த்திக்) கொள்கையைப் புகுத்தி, நான்முகன் (பிரமன்) என்னும் படைப்புத் தெய்வத்தைப் புதுவதாகப் படைத்து, அத்தெய்வத்தையும் அகரத்தாற் குறித்தனர்.

சுக்கு, திப்பிலி என்னும் மருத்துவச் சரக்குகள், ஏதேனுமொரு கரணியம் பற்றி அகரம் என்று பெயர் பெற்றிருந்திருக்கலாம். அதைப் பிற்காலத்தார் 'அ' (அ[2]) என்று குறித்திருக்கலாம்.

(புறச்சுட்டு ஆ = அந்த. "ஆயீரியல" என்று (தொல். 17) செய்யுள் வழக்கிலும், ஆயாள் (மலையாளம்), ஆஹ்ந (தெலுங்கு) என்று உலக வழக்கிலும, ஆகாரம் சொல்லாகவே வழங்கிவருதல் காண்க.

ஆ - அ[3]

௩. சொல்லுறுப்பு

ஆ (அகச்சுட்டு) - அ[4]. ஆ-ஆகு-ஆங்கு-அங்கு, ஆது-அது

அல் - அ[5]. ஒ. நோ. நல் - ந.

அ[6] (சொற்சாரியை) பெயரெச்ச வீறு யிருக்கலாம்.

அ[7] (எழுத்துச் சாரியை) நெடுங்கணக்கின் முதன்மையும் பலுக் கெளிமையும் பற்றியது.

அ[8] (அசைச்சொல்) குறிப்புப் பெயரெச்ச வீறுயிருக்கலாம். அசைச் சொற்களெல்லாம் பொருள் குன்றிய அல்லது இழந்த சொற்களே.

அ[9] (அயற்சொல் முன்னொட்டு) பலுக்கெளிமையும் ஆட்சியும் பற்றியது. பலுக்கு = உச்சரிப்பு.

அ[10] (இரக்கக் குறிப்பு) இயற்கை பற்றியது. ஆ-அ. ஒ.நோ: E. ha, hah.

அ[11] (பலவின்பாற் பெயரீறு) சுட்டாட்சி பற்றியது.

அ[12] (ஆறும் வேற்றுமை அஃறிணைப் பன்மையுருபு) பலவின் பாற் குறிப்பு வினைமுற்றீறு. கைகள் என-என கைகள் (சொன் முறை மாற்று).

அ[13] (பலவின்பால் வினைமுற்றீறு) சுட்டாட்சி பற்றியது.

அ[14] (வியங்கோள் வினையீறு) அல்லீற்றுத் தொழிற்பெயரின் ஈறுகேடு. செய்யல்-செய்ய. செயல்-செய.

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்."
(தொல். நூன். 15)

"அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்."
(தொல். சொல். கிளவி. 36)

"மக்கட் பதடி யெனல்." (குறள். 196).

இவற்றில் தொழிற்பெயரே வியங்கோளாய் நிற்றல் காண்க.

அ[15] (இறந்தகால நிகழ்காலத் தெரிநிலைப் பெயரெச்சவீறு) சுட்டாட்சி பற்றியது.

செய் = செய்கை. செய் + அது ≈ செய்யது — செய்து = செய்கையுடைய — வன் — வள் — வர் — து — வை. செய்கை யுடையவன் = செய்தவன் ≈ செய்தான். வினையுடைமை வினை முடிந்தமையை யுணர்த்தும்.

உண்டு என்னும் ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்று, இன்று இருதிணை ஈரெண் மூவிட ஐம்பாற் பொதுவாய் வழங்குவது போன்றே, அது என்னும் சுட்டுச் சொல்லை ஈறாகக் கொண்ட செய்து என்னும் வாய்பாட்டு இறந்தகால வினைச்சொல்லும், முதற்காலத்தில் வழங்கிற்று.

உள் + அது = உள்ளது. உள் + து(அது) ≈ உண்டு.

செய்து + அ = செய்த = செய்த — வன் — வள் — வர் — அது — வை ஆன அந்த.

செய்து என்னும் வாய்பாட்டு வினைச்சொல் முதற் காலத்தில் முற்று வினையாகவும், பின்னர் முற்று வினையும் எச்சமுமாகவும் வழங்கி, அதன்பின் ஐம்பாலீறு பெற்ற காலந் தொடங்கி எச்சமாகவே வழங்கி வருகின்றது. செய்து என்னும் இறந்தகால வினைச்சொல் போலவே, செய்கின்று என்னும் நிகழ்கால வினைச்சொல்லும் அகரவீறு பெற்றுப் பெயரெச்சமாகும்

செய்கின்று + அ = செய்கின்ற — செய்கிற.
செய்கின்று என்னும் வாய்பாட்டு வினைச் சொல் எச்சப் பொருளில் வழக்கற்றது.

வினைச்சொல் வகைகளும் அவற்றின் இடைநிலைகளும், ஈறுகளும், அவற்றிற்குரிய இடங்களில் விரிவாக விளக்கப் பெறும்.

அ[16] (குறிப்புப் பெயரெச்சவீறு) சுட்டாட்சி பற்றியது.

அ[17] (நிகழ்கால வினையெச்சவீறு) அல்லீற்றுத் தொழிற் பெயரின் ஈறுகேட்டால் நேர்ந்தது.
செய்யல் (வேண்டும்) — செய்ய (வேண்டும்).

"வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும்."
(தொல். எழுத். தொகை. 14)

அ[18] பொருள்வேறுபாடு பற்றியது.

அ[19] பலுக்கெளிமை நோக்கியது.

அ[20] அகரத்தின் முதன்மையும் மாத்திரையும் பற்றியது.

அ[21] முதற்குறிப்பு.

௪. குறி

அ[22] (எட்டென்னும் எண்குறியும் வல்லூற்றின் குறியும்) எண்வகைப்பட்ட பொருளின் அல்லது பொருட்டொகுதியின் பெயர் முதலெழுத்தாகவும், வல்லூற்றின் பெயர் ஒன்றன் முதலெழுத்தாகவும் இருக்கலாம். இருபெயரும் இறந்துபட்டன போலும்.

சிறப்புக் குறிப்பு

எழுத்துக்களை யெல்லாம் உயிரும் மெய்யும் எனக் கூறுபடுத்தியும், உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் பிறப்பும் ஒலியும் பற்றி முறைப்படுத்தியும், உயிருக்கும் மெய்க்கும் போன்றே உயிர்மெய்கட்கும் வேறுவரிவடிவமைத்தும், வண்ணமாலை (Alphabet) முதன்முதலாக அமைக்கப் பெற்றது தமிழிலேயே. உயிரும் மெய்யும் மட்டுங்கொண்டது குறுங்கணக்கு என்றும், அவற்றொடு உயிர்மெய்யுங் கொண்டது நெடுங்கணக்கு என்றும், பெயர்பெறும். இருவகைக் கணக்கிலும் அகரமே தமிழின் முதலெழுத்தாம்.

வேத ஆரியர் இந்தியாவிற்குட் புகுந்த பின்னும், நீண்டகாலம் எழுத்தின்றித் தம் முதனூலாகிய வேதத்தை வாய்மொழியாகவே வழங்கி வந்ததனால், அஃது 'எழுதாக் கிளவி' எனப்பட்டது. தமிழரோடு தொடர்பு கொண்ட பின்பே, முதலிற் கிரந்த வெழுத்தையும் பின்பு தேவநாகரியையும் 'அவர்' அமைத்துக் கொண்டனர். இற்றைத் தமிழெழுத்திற்கும் அசோகன் கல்வெட்டுப் பிராமியெழுத்திற்கும் யாதொரு தொடர்புமில்லை. இதன் விளக்கத்தை **நெடுங்கணக்கு** என்னும் உருப்படியிற் கண்டு கொள்க.

கி. மு. 2-ஆம் நூற்றாண்டினரான திருவள்ளுவர் 'அகர முதல தமிழெழுத்தெல்லாம்' என்னாது "அகர முதல எழுத்தெல்லாம்" என்று பொதுப்படக் கூறியிருப்பதால், தென்னாட்டுத் தமிழெழுத்தோடு அதன் வழிப்பட்ட கிரந்த வெழுத்தையும், வட நாட்டுப் பிராமி யெழுத்தையும் அவர் அறிந்திருத்தல் வேண்டும்.

குவா குவா வென்று அழுவதாகச் சொல்லப்படும் குழவி வாயின் முதலொலியை, 'அஆ அஆ' என்று அழும் ஒலியாகவும் கொள்ளலா மெனினும், அது முழைத்தல் மொழியைச் (Inarticulate Speech) சேர்ந்த வொலியாகலான், இழைத்தல் மொழியைச் (Articulate Speech) சேர்ந்த அஆ வொலியாகாது. அதனாலேயே அகர முதல மொழியெல்லாம் என்னாது "அகர முதல எழுத்தெல்லாம்" எனக் கூறினார் திருவள்ளுவர். பினீசியம், எபிரேயம், அரபி, கிரேக்கம், இலத்தீனம், ஆங்கிலம் முதலிய மேலை மொழிகளின் குறுங்கணக் கிலும் அகரமே முதலெழுத்தாம். ஆங்கில அகரம் தமிழகரத்தை யொத்து நேராகவும் ஒலிக்கும்; அதை யொவ்வாது கோணையாகவும் ஒலிக்கும். அக்கோணை யொலி, வடார்க்காட்டு ஆம்பூர் மக்கள் காய் என்னும் சொல்லிலுள்ள ஆகாரத்தை யொலிப்பது போன்றது. அவ்வொலி செந்தமிழிற் கொள்ளப்படாது. எழுத்திற்குரிய நானிலை களுள் இறுதிநிலை யடைந்த எல்லா மொழி யெழுத்துக்களும், அகரத்தையே முதலாக வுடையன.

சென்னைப் ப. க. க. த. அகரமுதலிச் சீர்திருத்தம்:

செ. ப. க. க. த. அகரமுதலி,

(1) வடசொல் முன்வைத் தெழுதப்படும் அகர முன்னொட்டிற்கு 'ரங்கம் – அரங்கம்' என்று எடுத்துக் காட்டியும்,

(2) இன்மை யன்மை மறுதலைப் பொருளில் வரும் அகரத்தை 'ந' என்னும் வடமொழி அவ்வியயத்தின் திரிபென்று கூறி, அதற்கு முறையே அரூபம், அப்பிராமணன், அதர்மம் என்று எடுத்துக் காட்டியும், உள்ளது.

அரங்கம் என்னும் சொல் அறுக்கப்பட்டது என்னும் வேர்ப் பொருளை அடிப்படையாகக் கொண்டு ஆற்றிடைக் குறையைக் குறிக்கும் தூய தென்சொல்லென்றும், ஸ்ரீரங்கம் என வழங்கும்

திருநகரின் பழம் பெயர் திருவரங்கம் என்னும் தென்சொல்வடிவே யென்றும், அரங்கம் என்னும் தென்சொல்லே வடமொழியில் ரங்க எனத்திரிந்த தென்றும், அரங்கம் என்னும் உருப்படியில் வெள்ளிடை மலையென விளக்கப்பெறும்.

அல் என்னும் தென்சொல்லே, அன் எனத்திரிந்து வடமொழி யில் 'ந' என இலக்கணப் போலியாக மாறியுள்ளதை, அல் என்னும் உருப்படியிற் கண்டு தெளிக.

இனி, அகரச் சாரியைக்கு எடுத்துக் காட்டிய 'தமிழப் பிள்ளை' என்னும் கூட்டுச் சொல்லையும் தமிழ் + பிள்ளை எனப் பகுக்காது தமிழன் + பிள்ளை யெனப் பகுத்து, நிலைமொழியீறு கெட்டு வரு மொழி முதல் வலிமிக்க புணர்ச்சியாகக் கொள்வதே தக்கதாம் எனவும், அறிக.

இத்தகைய மறுப்பெல்லாம், இனிவரும் உருப்படிகளில் திருத்தம் என்னும் தலைப்பின் கீழேயே குறிக்கப்படும்.

மெய்யெழுத்துச் சாரியை, ஒரு சொல்லாக்க ஈறு, சிலபெயர் களின் ஆகார வீற்றுக் குறுக்கம், வண்ணக் குழிப்பு வாய்பாட்டீறு நெடுங்கணக்குப் பெயருறுப்பு என்னும் ஐம்பொருளும் சென்னை யகர முதலியிற் குறிக்கப் பெறவில்லை.

உ. அவரை

அவரை **Avarai**. பெ; n.

வழங்கும் இடம் — தமிழகம்

இயல் விளக்கம் — பெரும்பான்மை பச்சை நிறமும் சிறு பான்மை வெண்ணிறமும் செந்நிறமுள்ளதும், பெரும்பாலும் தட்டை வடிவான தும், இருவிரலம் (inches) முதல் அறுவிரலம் வரை நீண்டு பல்வகைப்பட்டிருப்பதும், வீட்டுப் புறங்களில் விளைக்கப்படுவதும், நளி (கார்த்திகை) சிலை (மார்கழி) சுறவ (தை) மாதங்களில் இவர் கொடியில் (Climber) காய்ப்பதும், கறிவகையாகச் சமைக்கப் படுவதும், உடல் நலத்திற் கேற்றதும், சுவை யுள்ளதுமான காய் வகை; **A kind of bean including many varieties.**

மறுபெயர்களும் வழங்கும் இடமும்:

முதிரை (ப. கு சி.), சிக்கடி (பிங்), இவ்விரு பெயரும், இலக்கிய வழக்கு. முதிரை என்பது துவரையையுங் குறிக்கும்.

"சங்கு லுணவிற்குங் கறிக்கு முறைகளுக்கும்
பொங்குதிரி தோடத்தோர் புண்சுரத்தோர் – தங்களுக்கும்
கண்முதிரைப் பில்லைநோய்க் காரருக்குங் காழுறையா
வெண்முதிரைப் பிஞ்சாம் விதி." (ப. கு. சி. 697)

இதன் பொருள் – விதை முதிராத வெள்ளையவரைப் பிஞ்சு, இரவுண விற்கும் மருந்துண்பவர்க்கும் ஊதை (வாதம்) முதலிய முந்நாடிக் குற்றம், புண், காய்ச்சல் விழிக்குள் முதிர்ந்த கோழைப்பில்லம் ஆகிய நோயுடையார்க்கும், நல்லதாம்.

வேற்றுமைப்பாடு. முதல்வகை. எ–டு: அவரையை, அவரையால், அவரைக்கு, அவரையின், அவரையது, அவரையில்.

பழமொழி :

'அவரை போட்டால் துவரை முளைக்குமா ?'

'ஆடிமாதம் அவரை போட்டால் கார்த்திகை மாதம் காய்.'

சொல்வரலாறு :

அம்முதல் = அமுங்குதல், அமுக்குதல்.

அம் – அம்மி = அமுக்கி யரைக்குங் கல்.

அம் – (அமு) – (அமுகு) – அமுங்கு – அமுக்கு – அமுக்கம்

அமுக்கு – அமுக்கல் – அமுக்கலான் = கொப்புளங்களை அமுங்கச் செய்யும் தழை.

அம் – அமிழ் – ஆழ் – அழுந்து – அழுத்து – அழுத்தம்.

அமுக்குவதனாலும் அழுத்துவதனாலும் ஓரிடம் பள்ளமாகும்; ஒரு பொருள் தட்டையாகும்.

அம் – அமல் – அவல் = 1. பள்ளம். "அவலிழியினும் மிசையேறினும்." (புறம். 102 : 3). 2. விளைநிலம். 3. குளம். 4. தட்டையாக இடித்த நெல்லரிசி அல்லது கம்பரிசி. பள்ளக் கருத்தினின்று குள்ளக் கருத்துந் தோன்றும்.

ஒ. நோ : பள் - பள்ளம். பள் - பள்ளை = 1. குள்ளம். 2. பள்ளையாடு. பள்ளையன் = குறுகித் தடித்தவன். பள்ளையாடு = குள்ளமான ஆடு. குள்ளக் கருத்தினின்று சப்பைக் கருத்துத் தோன்றும். ம-வ, போலி ஒ. நோ: செம்மை-செவ்வை. சும-சுமல்-சுவல் = சுமக்குந் தோட்பட்டை.

அவல் - (அவலை)-அவரை = சப்பையான அல்லது தட்டையான காய்வகை. ல-ர, போலி.

ஒ. நோ: அயில்-அயிலை-அயிரை.

அவரை வகைகளிற் சில உருண்டுதிரண்டிருப்பினும், பெரும்பான்மை நோக்கி அவை விலக்காகக் கொள்ளப் பட்டன. மேலும், பிஞ்சுநிலையிலேயே சமைக்குமாறு மருத்துவ நூல்கள் கூறுவதால், எல்லா வகைகளும் பிஞ்சுநிலையில் சப்பையாகவே யிருத்தலை நோக்குக.

ஒவ்வொரு பொருளும் அதன் சிறப்பியல்பு பற்றியே பெயர் பெறுவது மரபு. வாழை, கத்தரி, முருங்கை, வெண்டை, பூசணி, சுரை, பீர்க்கு, புடலை, பாகல் முதலிய பிற காய்வகைகள் எல்லாவற்றோடும் ஒப்பு நோக்கி, அவரை யொன்றே தட்டையா யிருத்தலைக் கண்டறிக.

பள்ளம் என்பது ஒன்றன் மேல்மட்டத்தின் தாழ்வு; குட்டை என்பது ஒன்றன் உயரத்தின் தாழ்வு; சப்பை என்பது ஒன்றன் திண்ணத்தின் அல்லது புடைப்பின் தாழ்வு. இம் முக்கருத்தும் ஓரினப் பட்டன. ஆழ மில்லாத கிண்ணம் தட்டம் எனப் பெயர் பெற்றிருத்தல் காண்க.

பொருள்வகை :

[1] ஆட்டுக்கொம்பவரை = ஆட்டுக் கொம்புபோல் வடிவுள்ள அவரை; Kind of bean that resembles goat's horn in shape.

[2] ஆரால்மீனவரை = ஆரால் மீன்போன்ற வடிவுள்ள அவரை; Kind of bean that resembles sand-eel in shape.

[3] ஆனைக்காதவரை = ஆனைக் காது போல் வடிவுள்ள அவரை;Kind of bean that resembles elephant's ear in shape

[4] கணுவவரை=கொடியின் கணுக்களிற் காய்க்கும் அவரை; Kind of bean that brings forth fruits at joints also.

[5] கொழுப் பவரை = குட்டையாகக் கொழுத்த சதையுள்ள அவரை; Kind of bean that is short and fleshy.

[6] கோழியவரை (கோழிக்காலவரை)=கோழி விரல்போன்ற வடிவுள்ள அவரை; Canavalia gladiata

[7] சிவப்பவரை—செவ்வவரை = செந்நிற அவரை; A red variety of bean, Lablab cultratus.

[8] சிற்றவரை—மணியவரை = A small variety of bean.

[9] தீவாந்தர வவரை = கீழைத் தீவினின்று வந்த அவரை; A bean from the eastern islands (W.).

[10] நகரவரை — Dolichos Rugosus (W)

[11] பாலவரை—வெள்ளவரை; A white variety of bean,

"அவரைக் கொழுங்கொடி விளர்க்காய்
கோட்பத மாக." (புறம். 120: 10-11.)

[12] பேரவரை — A large variety of bean.

[13] முறுக்கவரை = திருகல் முறுகலாகவுள்ள அவரை; Psopha Carpus Tetragonolobus.

இனப்பொருள்கள்

[1] கப்பல் அவரை = French beans.

[2] காட்டவரை=கொழுப்பவரை போன்றதாயுள்ள மொச்சை (சேலம் வழக்கு); Wild bean, Lablab Vulgaris.

வீட்டுப் புறத்தில் விளைவிக்கப்படும் அவரையை நோக்கி மொச்சை காட்டவரை எனப்பட்டது. இதனால், அவரைக்கு வீட்டவரை என ஓர் அடைமொழிப் பெயர் பெறப்படும்.

வீட்டவரைக்கும் காட்டவரைக்கும் வேறுபாடு.

வீட்டவரை	காட்டவரை
(1) *வீட்டுப் புறத்தில் விளைக்கப்படுவது*	*காட்டுப் புறத்தில் விளைக்கப்படுவது.*
(2) *கொடியாகப் படர்வது*	*குத்துச் செடியாக வளர்வது.*
(3) *இளங்காய் கறியாகச் சமைக்கப் படுவது*	*முற்றிய காய் அவித்துத் தின்னப்படுவது.*
(4) *தோல் மெல்லியது*	*தோல் வல்லியது.*

[3] **அயல் நாட்டு (*சீமை*) அவரை** = மருதங்காய் போன்ற வடிவுள்ளதும் நீண்டதுமான வெளிநாட்டுக் காய்வகை; **A kind of foreign vegetable.** அயல் நாட்டை அல்லது மேல் நாட்டைப் பொது மக்கள் '*சீமை*' என்னும் வடசொல்லாற் குறிப்பர். இங்கு வட சொல் என்றது வட நாட்டுச் சொல்லை.

[4] **சீனியவரை — கொத்தவரை — குத்தவரை** = கொத்துக் கொத்தாகக் காய்க்கும் காய்வகை; **A species of pulse whose fruits are in bunches.**

[5] **சுடலையவரை** = சுடுகாட்டுப் பக்கத்தில் இயற்கையாக விளைவதும், சீனியவரை போன்றதும், உண்ணப் படாததுமான காய்வகை; **A species of inedible bean growing wildly near burial or burning grounds.** இது பேயவரை யெனவும் படும்.

[6] **பாடவரை - வாளவரை - தம்பட்டவரை - சாட்டவரை** = வாள்போல் நீண்டு பட்டையாக விருக்கும் காய்வகை; **Sword-bean, Canavalia ensiformis.**

இனச்சொல் :

அவரை — தெ(லுங்கு) - சிக்குடு,
க(ன்னடம்) அவர, அவரி, ஆவரே, அமரே;
ம(லையாளம்) - அவர, அமர;
கோ(த்தம்) - அவ்ர்;
துட(வம்) - எவிர் (f);

து(ளுவம்) – அவரெ, அபரெ, Lablab Vulgaris
அவடெ. அபடெ., ஆவடெ
[a kind of bean]

அவரைக் காய் என்பது மலையாளத்தில் அவரக்க எனத் திரிந்துள்ளது. அமரக்க என்பது அவரக்க என்பதன் திரிவு

துளுச் சொற்களுள் ரகரமுள்ளவை ஒருவகையையும் டகர முள்ளவை மற்றொரு வகையையும் குறிப்பன வாகப் பரோ எமனோ திரவிட அகர முதலியிற் குறிக்கப் பட்டுள்ளது. சென்னைப் ப. க. க. துளு அகர முதலியில் அங்ஙனங் குறிக்கப் படவில்லை.

இணைமொழி :

அவரை — துவரை.

சிறப்புக் குறிப்பு .

"அவரை கொய்யுந ரார மாந்தும்" (புறம். 215: 5).
"சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொடு" (ஷ 335:5)

என்னும் புறப்பாட்டடிகள், பண்டைக் காலத்தில் அவரையும் காட்டில், மொச்சைபோல் விளைக்கப்பட்ட தென்றோ, மொச்சையும் அவரை யெனப் பட்டதென்றோ, கருத இடந்தரும்.

கொட்டையவரை யென்று பதார்த்த குண சிந்தாமணி குறித் திருப்பது, ஒரு தனிவகையாகத் தெரியவில்லை.

சீர்திருத்தம் :

சென்னைப் ப. க. க. த. அகரமுதலி, கோழியவரையை வாளவரை [Sword-bean] யென்று குறித்துள்ளது.

ஆரால் மீனவரை, ஆனைக்காதவரை, கொழுப்பவரை, சுடலை யவரை முதலிய பெயர்கள் அதிற் குறிக்கப் பெறவில்லை.

மேல் நாட்டுத் தமிழறிஞர் தம் அறியாமையால் அவரைக்காய் என்பதன் திரிபான அவரக்க, அமரக்க என்னும் சொற்களையும் அவரையைக் குறிக்கும் தனிச் சொற்களாகக் குறித்துள்ளனர்.

3. இஞ்சி

சொல்: இஞ்சி

சொல்வகை : பெயர்ச்சொல்-அஃறிணைப் பொருட் பெயர்.

வேற்றுமைப்பாட்டு வகை.

முதல்வகை (சாரியை யில்லது), எ-டு: இஞ்சியை, இஞ்சியால், இஞ்சிக்கு, இஞ்சியின், இஞ்சியது, இஞ்சியில்.

இயல் விளக்கம்

இஞ்சி[1] — செம்புருக்கிச் சாந்தாக வார்த்து இறுகக் கட்டிய திண்ணிய கோட்டை மதில் வகை.

இஞ்சி[2] — பித்தத்தைப் போக்குவதும், மருந்துகளிலும் கறிவகைகளிலும் பெரும்பாலும் கூட்டுச் சரக்காகச் சேர்க்கப்படுவதும், கார்ப்புச் சுவையுள்ளதுமான, கிழங்குள்ள பூண்டுவகை.

பொருளும் ஆட்சி மேற்கோளும்

இஞ்சி[1], பெ. திண்ணிய கோட்டை மதில் வகை.
"கொடுங்க ணிஞ்சி" (பதிற்றுப். 16 : 1).

"உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கு நூல்" (743)

என்னுந் திருக்குறளிற் குறித்துள்ள திண்மை என்னும் வகைப்படி, "செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை" யே (புறம். 201) இஞ்சி என்னும் மதில் வகையாகும்.

இஞ்சி[2], பெ. 1. இஞ்சிப் பூண்டு; Ginger-plant.
"மஞ்சளும் இஞ்சியும் மயங்கரில் வலயத்து"
(சிலப். 10:74). 2 இஞ்சிக் கிழங்கு; Ginger-root.

இஞ்சி வகை :

இஞ்சி மாங்காய் அல்லது மாங்காயிஞ்சி, ஊறுகாயாகப் பயன்படுவது; Mango - ginger.

கூட்டுச் சொல் : இஞ்சிக் கிழங்கு பெ, ginger - root.
இஞ்சிததேறு, பெ. இஞ்சித் துண்டு; Small piece of green ginger, (யாழ்ப்.)

இஞ்சிப்பாகு, பெ. இஞ்சி இளகிய (லேகிய) வகை; A kind of ginger electuary.

இஞ்சிப் பாவை, பெ. இஞ்சிக் கிழங்கு (மலைபடு. 125, உரை). Ginger, as bearing the shape of a doll.

இஞ்சி வேர், பெ. இஞ்சிக் கிழங்கு Ginger - root.

மரபு வழக்கு : இஞ்சி தின்ற குரங்குபோற் பஞ்சரித்தல் (தொந்தரவு செய்தல்).

தொடர்மொழி : இஞ்சி தின்ற குரங்கு.
உவமைப் பழமொழி : இஞ்சி தின்ற குரங்கு போல.

சொல்வரலாறு :

இஞ்சி[1] உல்-ஒல். ஒல்லுதல்=பொருந்துதல். உல்-உர்-உறு. உறுதல் = பொருந்துதல். செறிதல், வலியுறுதல். உறு-உறுதி= திண்ணம். வலிமை. உர்-உரம் = வலிமை உறு-உற. உறத்தல் = செறிதல், இறுகுதல்.

"விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே" (தொல்-சொல்.348).
உறந்த விஞ்சி = இறுகிய மதில்.

உல்-உள்-அள் = செறிவு (திவா.), வன்மை (சூடா.) அள்ளல் = நெருக்கம். அள்ளாகுதல் = செறிதல். அள்ளிருள் = செறிந்த இருட்டு. அள்ளுதல் = செறிதல் (சீவக. 614).

உள் - இள் - [இய்] - [இய்ஞ்சு] - இஞ்சு.

ஒ. நோ: குள் - [குய்] - [குய்ஞ்சு] - குஞ்சு. புள்-பிள்-பிய்-[பிய்ஞ்சு]-பிஞ்சு. கொள்-கொய். தொள்-தொய். பொள்-பொய்.

இஞ்சுதல் = செறிதல், இறுகுதல், திணிதல்.
இஞ்சு-இஞ்சி = திணிந்த மதில் வகை.

பெரும்பாலும் செம்பு புனைந்தியற்றிய தாகவும் சிறுபான்மை அரைத்த சாந்திட்டமைத்ததாகவும், பகைவரால் எளிதாகத் தாக்க முடியாவாறு திண்ணிதாகக் கட்டப்பட்ட மதில், ஏனைவகை மதில்களினும் மிக இறுகியிருத்தல் பற்றி இஞ்சி யெனப்பட்டது,

இஞ்சி[3] 'ஈ' அண்மையைச் சுட்டுமாறு உதட்டைப் பின்னுக்கு இழுத்தொலிக்கும் உயிரொலி ஈ – ஈல் – ஈர் - ஈர்த்தல்=இழுத்தல். ஈர்தல் = இழுத்தறுத்தல் பல்லாற் கடித்திழுத்து உரித்தல், இழுத்தல். அறுத்தல்.

ஈல்-இல்-இள்-இழு. ஒ. நோ : கொள் கொம்பு-கொழுகொம்பு. கொள்நன்-கொழுநன். இழுத்தல் = பின்னிழுத்தல், உள்ளிழுத்தல், உறிஞ்சுதல். இள் - [இய்] - [இய்ஞ்சு] - இஞ்சு.

இஞ்சுதல் = நீரை உள்ளிழுத்தல், நிலத்தில் நீர் சுவறுதல். இஞ்சு-இஞ்சி = நீரை உள்ளிழுத்துத் திரண்டிருக்கும் கிழங்குவகை, அஃதுள்ள பூண்டு. இஞ்சி காய்ந்து நீர் வற்றினுற் சுக்கு. இஞ்சி X சுக்கு. சுக்கு = நீர் சுண்டி வறண்டிருப்பது. சுள்ளுதல் (சுள்ளெனல்) = காய்தல், நீர்வற்றுதல். சுள்-சுள்கு-சுட்கு-சுக்கு. ஒ. நோ: வெள் - வெள்கு - வெட்கு. கொள் - கொள்கு - கொட்கு - கொக்கு = வளைந்த கழுத்துள்ள பறவை.

இனச்சொல்:

[1] திரவிடம் : மலையாளம் - இஞ்சி, குடகம் - இஞ்சி, கோத்தம் - இஞ்ச், பிராகிருதம் (பாலி) - சிங்கி, – சிங்கிவேர;

[2] ஆரியம் : (சமற்கிருதம்) — ச்ருங்கவேர, பர்சி,(பர்ஜி)— சிங்கிவேர.

ME.gingivere, OFr. gengibre, LL gingiber, L.zingiber, Gk. zingiberis, Skk. srngavera. E. ginger.

[3] பிறமொழிக் குடும்பம் - மலாய் : இஞ்சிவேர்.

சிறப்புக் குறிப்பு :

இஞ்சி தொன்று தொட்டுத் தமிழ்நாட்டில் விளைக்கப் பெற்று வருவது.

" செய்யாப் பாவை வளர்ந்து கவின் முற்றிக்
காயங் கொண்டன " [மலைபடு. 125-6]

"இஞ்சிவீ விராய பைந்தார் பூட்டிச்
சாந்துபுறத் தெறிந்த தசும்புதுளங் கிருக்கை"
(பதிற்றுப். 42 : 10-11)

"மஞ்சளும் இஞ்சியும் மயங்கரில் வலயத்துச்
செஞ்சுளைப் பலவின் பரற்பகை யுறுக்கும்"
(சிலப். 10 · 74-5)

என்னும் பண்டையிலக்கியப் பகுதிகளால் அறியப்படும். தமிழகத்திலிருந்து பண்டைநாளிலும் மேனுடுகட்கு ஏற்றுமதியான சரக்குக்களில் இஞ்சியும் ஒன்ருகும். அது வேராயிருப்பதால் இஞ்சி வேரென்றும், கிழங்காயிருப்பதால் இஞ்சிக் கிழங்கென்றும், பாவை போன்றிருப்பதால் இஞ்சிப்பாவை என்றும், சொல்லப்படும். இஞ்சிவேர் என்னும் சொல்லே மேனுடுகளிற் பல்வேறு வடிவில் வழக்குப் பெற்றது.

திருத்தம் :

சமற்கிருத ஆரியர் இஞ்சி யென்னும் தென்சொல்லை ஆரியச் சொல்லாகக் காட்ட வேண்டி, ச்ருங்கவேர எனத்திரித்து மான் கொம்பு போன்றது எனப் பொருட் கரணியங் காட்டுவாராயினர். இது செயற்கையானதும் பொருத்தமற்றதும் ஆகும் என்பதை, வரலாறு மட்டுமின்றிச் சொல்வடிவும் தெளியக்காட்டும் வடமொழியில் ச்ருங்க என்பது கொம்பு என்றுமட்டும் பொருள்படும். வேர என்பது உடம்பைக் குறிக்கும். இவ்விரண்டும் எங்ஙனம் இணைந்து இஞ்சியைக் குறிக்கும்? இற்றை யறிவியல்களைத் தெளிய வறிந்த மேனுட்டறிஞரும், சமற்கிருத-ஆங்கில அகர முதலியிலும், இருபதாம் நூற்ருண்டு அகர முதலியிலும், ஆக்கசுபோர்டுச் சிற்றகர முதலியிலும், திரவிடச் சொற்பிறப்பியல் அகர முதலியிலும், சமற்கிருத ஆரியர் கூற்றையே தழுவியிருப்பது மிகமிக வியப்பிற் கிடமானதே. அவ்வகர முதலிகளுள்ளும், இருபதாம் நூற்ருண்டகர முதலி இஞ்சி வேர் என்பதை மலையா[மலாய்]ச் சொல்லாகக் குறித்திருப்பது இன்னும் வியப்பானதே. இதற்குத் தமிழர் வெளிநாட்டினின்று வந்தேறிகள் என்று தவருகக் கருதியிருப்பதே அடிப்படையாகும். வடநாட்டுத் திரவிடமொழியாகிய பர்சியில் சிங்கிவேர என்று வழங்குவதால் மட்டும், அது வடசொல்லாகிவிடாது. அம்மொழி அதைப் பிற்காலத்து வழக்கேற்றிருக்கலாம்.

பிற்சேர்க்கை: 'அகரம்' கட்டுரை வரலாற்றுப் பகுதியில் 'அ'- வேறெரு முயற்சியுமின்றி வாய்திறத்தலால் மட்டும் ஒலிக்கப்பெறும் உயிரொலி' எனச்சேர்த்துக் கொள்க.

'தென்மொழி'க்கு நன்கொடை.

26-8-69முதல் 2-9-69 முடிய, தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத்தமிழ் நெஞ்சங்கட்கு நம நன்றியும வாழ்த்தும் உரியவாகுக

	உரு.
சென்னை-25 ப. அர. நக்கீரன் அவர்கள் வழி, கிண்டி பொறியியற் கல்லூரி மாணவர்கள்:	
திரு. இரா. சிதம்பரம்.	15—00
திரு. ப. அர. நக்கீரன்	10—00
திருவாளர்கள்: கா. தேவநாதன், ந. இராமலிங்கம், ம. புகழேந்தி அருணகிரி (தலைக்கு 5உருபா மேனி)	20—00
அவர்வழி உருபா 2 மேனி கொடுத்த அன்பர்கள் : திருவாளர்கள் : கு. கணேசன், தெ. நாகலிங்கம், து. சூரியப்பிரகாசன், வை. பெரியநாயகம், இராம கிருட்டிணன்; தி. வேலுச்சாமி. (6)	12—00
அவர்வழி உருபா ஒன்றுமேனி கொடுத்த அன்பர்கள் : திருவாளர்கள்: சி. அருள்மணி, பாலசுப்பிரமணியன், சின்னையா (3)	3—00
கைத்தறி ஆசிரியர். அரியலூர்.	1—00
திரு. ஆற்றலரசு, சென்னை.	2—00
திரு. மு. ச. அழகேசன், சென்னை. (தொகுத்தளித்தது)	20—00
திரு. தி. சே. கந்தசாமி	5—00
சென்னை கூட்டுறவு நில அடமான வங்கியில் பணியாற்றும் அன்பர்கள் : திருவாளர்கள் : தகவை-மறவன், கலியமூர்த்தி, கே. கதிர்வேலு, (தலைக்கு ஓர் உருபா மேனி)	3—00
திருவாளர்கள் : இரா. கோவிந்தசாமி, பொன்னிவளவன், இரா. அரங்கராசன் (50 காசு மேனி)	1—50
திரு. அன்பரசன். சென்னை.	2—00
திரு. அமர் வாணிகர்கள் சென்னை-24.	5—00
சென்னை மாநிலக் கல்லூரியைச் சேர்ந்த அன்பர்கள் : செல்வியர். க. பிரபாகரி, மதிஒளிபீகம், கே. இராசேசுவரி, திருவாளர்கள் : இராச. இளங்கோ, இரா. பத்தவத்சலம், கே. பச்சையப்பன், அரங்க. வரதராசன், க. திருவேங்கடம், மனோகரன், செயராமன், (தலைக்கு ஓர் உருபா மேனி)	10—00
திருவாளர்கள் : து. மூர்த்தி, ந. க. இரகுபதி, ச. மணி (தலைக்கு உருபா இரண்டு மேனி)	6—00
திருவாளர்கள் : இராசரத்தினம், ப. குமரகுரு, (தலைக்கு உருபா மூன்று மேனி)	6—00

திருவாளர்கள்: ப. காளிமுத்து, சி.வெள்ளையன் (உரு 5மேனி) 10—00
சென்னை சட்டக் கல்லூரி மாணவர் திரு ஆ. பிச்சையரசு. 1—00
திரு மா. இராமலிங்கம், சென்னை. 3—00
திரு. சி. சாமிநாதன், மாநகராட்சி உயர் பள்ளி, சென்னை 1—00
திரு ம. முத்துசாமி கண்ணப்ப நாயனார் பள்ளி, சென்னை. 1—00
திரு வா. முத்துக்கிருட்டிணன், சென்னை. 1—00
திரு பி. இராசேந்திரன் சென்னை 0—50
சென்னை பொறியியற் கல்லூரி மாணவர்கள் :
திருவாளர்கள் : கு. வடிவேலு ச. சௌந்தரராசன்,
ச. குமரகுரு பரமேசுவரன் (தலைக்கு ஐந்து உருபா மேனி) 20—00
திரு. சி. ப. வேந்தன் 25—00
திரு. மு. பொன்னவைக்கோ 10—00
திரு. வே. ஆறுமுகம் 3—00
திரு. இரா. சின்னச்சாமி 2—00

(தொடரும்)

மகப்பேற்றிற்கு அன்பளிப்பு.

1. சேலம் தென்மொழி அன்பர் மருத்துவர் சி. இராமச்சந்திரன் அவர்கட்கும், அவர்தம் துணைவியார் பார்வதி அம்மையாருக்கும் ஆண்மகவு பிறந்துள்ளது. அதன் நினைவாகத் தென்மொழியின் வளர்ச்சிக்கு உரு 101—00 நன்கொடையாக விடுத்துள்ளனர்.

அன்னார் தம் மகவுடன் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழ வாழ்த்தியும் அவர்தம் தமிழ் நெஞ்சிற்கு நன்றி கூறியும் மகிழ்கின்றோம்.

2 தென்மொழி முகவர் உரத்த நாட்டுப் புதூர் அரங்க. திருமாறன் அவர்களின் துணைவியார்க்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்து கலைச்செல்வன் என்று பெயர் சூட்டப் பெற்றதன் நினைவாகத் 'தென்மொழி'க்கு உரு. 10—00 அன்பளிப்புச் செய்துள்ளனர். அவர்கட்கும் மனமார்ந்த நன்றியும் வாழ்த்தும் அளிக்கின்றோம்.

-: திருமணம் :-

முகவை மாவட்டப் பாமபூர்த் தென்மொழி அன்பர் திரு. சே. கதிரேசன் அவர்கட்கும் திருவாட்டி கமலாதேவி அம்மையார்க்கும் விடை ௬-ஆம நாளன்று திருமணம் நிகழ்ந்தேறியது. அதையொட்டி இருவரும் 'தென்மொழி'க்கு உரு. 51 00 நன்கொடை வழங்கியுள்ளனர். அன்னார் தம் தொண்டுள்ளத்திற்கும் நன்றி கூறி அவர்கள் இனிதே, நெடிது வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

—அமைச்சர்.

முதுமையைத் தவிர்க்க முடியுமா?

— செ. பன்னீர்ச்செல்வம்

இன்றோ அல்லது நாளையோ நம் ஒவ்வொருவருடைய இளமையும் மறைந்துபோய் முதுமை வந்தெய்தும் என்ற அதிர்ச்சியும், அதன் விளைவால் ஒருநாள் நாம் இறந்துபோகப் போகின்றோம் என்ற அச்சமும் நம் ஒவ்வொருவருக்கும் ஏற்படுகின்றன. மயிர் நரைத்துப் போகின்றது. முகத்திலும், உடல் தோலின் மீதும் சுருக்கங்கள் விழுகின்றன. ஒலியைக் கேட்கும் ஆற்றல் குறைவுறுகின்றது. கண் பார்வையும் மங்குகின்றது. இறுதியில் நம்மைச் சுற்றியுள்ள, நம்மோடு தொடர்புள்ள, உலகியல் பொருள்களின் மீதுள்ள பற்றும் நாட்டமும் நீங்கிப்போகின்றன. இந்நிலையில் ஒருநாள் நம்மை மீளாத்துயில் ஆட்கொள்ளுகின்றது.

நாம் புது மலர்ச்சியுடனும், வன்மையுடனும், எச்சரிக்கை-யோடுந்தாம் வாழ்வைத் தொடங்குகின்றோம். வாழ்க்கைப் பாதை யானது ஒரு கொடிய செங்குத்தான பாறையின் முனையில் உள்ள மிகக்குறுகிய வழிபோன்றே அமைந்துள்ளது. அவ்வழியில் செல்லும் நமக்குக் களைப்பேற்படுகின்றது. எவ்வளவுக் கெவ்வளவு களைப்பேற்படுகின்றதோ அவ்வளக் கவ்வளவு நம் நடையிலும் மாற்றம் உண்டாகின்றது. மிக்க விரைந்தோ, அல்லது சற்றுப் பிந்தியோ நம்முடைய உறுதியற்ற தன்மையினுலோ அல்லது இயல் நிகழ்ச்சியின் விளைவாலோ, அக்கொடிய செங்குத்துப் பாறையின் ஓரத்திற்குக் கொண்டு வரப்பெற்று, இறப்புக் கடலில் வீழ்ந்து மறைந்து போகின்றோம். இவ்வொப்புமை முதுமை யடைதலின் முறைமையைப் பொருத்தமாக விளக்குகின்றது.

இளமை நீடிக்கவும், முதுமை வந்தெய்துவதைத் தள்ளிப் போடவும் நெடுங்காலமாகவே அருமுயற்சி செய்யப்பெற்று வந்துள்ளதை வரலாற்று வாயிலாக நாம் அறிகின்றோம் இத்-துறையில், பல்வேறு வகையான முயற்சிகள், பல்வேறு காலங்களில் பல்வேறு நாடுகளிலும் மேற்கொள்ளப் பெற்றன. என்றும் இளமை யோடிருப்பதற்கான இறவா மருந்தொன்றைக் (Elixir) காணல்

வேண்டும் என்ற பெருமுயற்சி பண்டைக்காலப் பொன் மாற்றுச் சித்தர்களால் (Alchemists) மேற்கொள்ளப் பெற்றிருந்தது.

'மேதியா' என்னும் ஏவல், வைப்பு மந்திரக்காரி (பில்லி சூனியக்காரி) ஒருத்தி 'ஏசன்' என்னும் ஓர் அரசனின் உடலி னின்றும் குருதியை வடித்தெடுத்துவிட்டு, அதற்குப் பகரமாக, புற்கள், கிழங்குகள், பச்சிலைகள், கருநிற ஆட்டுக்கடாவின் குருதி, ஆந்தையின் இறைச்சி, பாம்பின் தோல் இவற்றைக் காய்ச்சி வடித்த சாரத்தை, அவனுடைய உண்மூகக் குருதி நாளத்தில் செலுத்தினாள். அதனால் அவன், புதிய வலிவும், பொங்குகின்ற ஆண்மையும், ஆற்றலும், இளமையும் வனப்பும் கொண்டு வாழ்ந்தான் என்றும், இம்முறை பின்பு எப்பொழுதுமே, எவராலுமே மேற்கொள்ளப் பெறவில்லை என்றும் பழங்குறிப்புகள் அறிவிக்கின்றன.

பதினைந்தாம் நூற்றுண்டின் எழுத்தாளருள் ஒருவரான 'கோர்னு ரோ' என்பவர் மிக எளிய உணவை வாழ்நாள் நீட்டிப்பிற்குப் பரிந்துரைத்தார். அவர், நாளொன்றுக்குப் பன்னிரண்டு விரலிகை (அவுன்சு) திண்ணிய உணவை மட்டுமே உண்டு 102 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்.

இளம் பெண்களின் மூச்சுக் காற்றை உட்கொள்ளும் முறை பண்டை நாட்களில் சிறப்புப் பெற்றிருந்தது 'கிளாடியசு ஃகெர்மிப்' என்பவர் தம்முடைய கல்லறையின் மீது கீழ்க்கண்டவாறு பொறிக்கச் செய்தார். "உரோம நாட்டு மருத்துவர்கட்கும்; நல்வாழ்க்கை வாழ்கின்றவர்கட்கும்: கிளாடியசு ஃகெர்மிப் என்பவன், மருத்துவர்களே வியக்கும் வண்ணம் இளம் பெண்களின் மூச்சுக் காற்றை உட்கொண்டே 115 ஆண்டுகள், 5 நாட்கள் உயிர் வாழ்ந்தான். நீங்களும் உங்கள் வாழ்க்கையில் அம்முறையைப் பின்பற்றுங்கள்."

ஈபுரு, சிரியா நாடுகளின் மக்கள் இளமை யுடையவர்களின் குருதியைக் குடித்தும், அதில் குளித்தும் வந்தார்கள். அவர்கள் அம்முறை, மீண்டும் இளமையையும் வலிவாற்றலையும் தருவதாக நம்பினர்.

உரோமர்கள் வட்டரங்குகளில் அல்லது வாட்போர் அரங்குகளில்

சண்டையிடும் மறவர்களின் உடலினின்று வடியும் குருதியைப் பேராவலுடன் நக்கிப் பருகினர். பதினைந்தாம் நூற்றாண்டில் அவர்கள், இளம் அடிமைப் பெண்களின் மார்பகங்களில் பாலுடன் குருதியையும் உறிஞ்சிக்குடிக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனராம்.

மற்றவர்கட்குக் குருதியைக் குடிக்கும் பழக்கம் நிறைவளிக்கவில்லை. அவர்கள், இளமையுடையோரின் குருதியை முதியவர்களின் உடலில் செலுத்தி இளமையையும் வலிமையையும் காண முயன்றனர். பச்சிளங் குழந்தைகள், சிறுவர்கள் இவர்களின் குதிருயைப் பயன்படுத்தியமைக்குக் குறிப்புகள் உள்ளன. "போப் இன்னசென்ட் VIII" என்பவர் மூன்று இளைஞர்களுடைய குருதியைத் தம்முடலில் செலுத்திக் கொண்டு உடனேயே இறந்துபோனார். குருதியின் வகைகள் பற்றியும், தம்முடலுக்குத் தேவையான குருதியின் இனம் பற்றியும் அவர் அந்நாளில் அறிந்திருக்கவில்லை.

'சியார்சு வோரோநாப்' என்பவர் குரங்குகளின் உறுப்புகளைப் பயன்படுத்தும் திட்டமொன்றை மேற்கொண்டிருந்தார். குரங்கி- னுடைய விதையை அறுவை மருத்துவத்தால் முதிய ஆண்களுக்கு மாற்றியமைத்துப் பெரும் பொருள் திரட்டினார்.

ஒருவகை இள விலங்கின் உயிரணுக்கள், பிற இன விலங்கின் உயிரணுக்களோடு நிலையாக இணைந்து இயங்குவதில்லை. ஒரே இன விலங்குகளிலும், உறுப்புகள் ஒட்டப்பெறுதல் கூட, ஒரு நிலையைத் தவிர்த்து எப்பொழுதும் குறுகிய வாழ்நாளையே அளிக்கின்றது. பெயர்த்து அமைக்கப்பெற்ற உறுப்புகளின் உயிரணுக்கள், குருதிச் சுழற்சிக்கான தொடர்பைப் பெற்றாலும், சிறிது காலத்திற்குத்தான் அவை உயிர்வாழமுடிகின்றது. அதன் பிறகு பின் விளைவுகள் தோன்றுகின்றன. ஒட்டப்பெற்ற பகுதி மறையத் தொடங்குகின்றது. அப்பகுதியிலுள்ள குருதியின் வெள்ளை உயிரணுத் திரள்கள் விரைவிலேயே அழிந்துபோகின்றன, இதனாலேயே அறுவை மருத்துவர்கள் ஒருவருக்குப் புதிய தசை ஒட்டப்பெற வேண்டி- யிருப்பின், அவருடைய உடலின் வேறு பகுதியிலிருந்தே எடுத்துக் கொள்கின்றனர். கண்விழி அமைப்பில் இத்தடை குறுக்கிடாமைக்குச்

கரணியம், குருதிச் சுழற்சியையும், பின் விளைவுகளையும் அது பெற்றிருப்பதில்லை.

இவருடைய எண்ணங்களும் செயன்முறைகளும் வெற்றியளிப்பனவாக இருந்திருப்பின் பண்டை நாட்களின் பொருந்தாக் கற்பனை யுருவங்களான, கழுகுத் தலையுள்ள அரிமா,மாந்த நடுவுடல் அமைந்த குதிரை, மீனின் வால்பகுதியுள்ள பெண், இவற்றை இந்நாளில் உயிர்நூல் வல்லுநர்கள் தங்கள் ஆய்வுச் சாலைகளில் உருவாக்கி யிருப்பார்கள்.

பேராசிரியர், 'சார்லசு எட்வர்ட்டு பிரௌன் செகுவாது' என்னும், பிரஞ்சுப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த, உடல் நூல் வல்லுநர், தம், **72**ஆம் அகவையில் நாயினுடைய விதை நாளக் கருச்சத்து நீரை **(Saline extract of dogs testes)** தம்முடைய உடலில் செலுத்திக் கொண்டு இளமையும், ஆற்றலும் சுறுசுறுப்பும் கண்டார். இக் கண்டுபிடிப்பை அவர் மக்கட்கு விளம்பரப் படுத்தினர். முதுமை யடைந்தவர்கள் நம்பிக்கையுடனும், ஆர்வத்துடனும் அக் கருச்சத்து நீரை எவ்வளவு விலைகொடுத்தும் பெறுவதற்கு அவரை அணுக முற்பட்டனர். பேராசிரியரால் அவர்களுடைய தேவையை நிறைவு செய்வதற்கு இயலவில்லை. அவர்களுடைய பிடியினின்றும், தப்பித் தம்முயிரைக் காத்துக்கொள்ளும் பொருட்டு இலண்டன்மாநகரத்திற்கு ஓடிச்சென்றார். அங்கே அவர் கடைசி நேரத்தில், ஏளனக் குரலும், சிரிப்பொலியும் தம் காதுகளில் கேட்பதாக உணர்ந்து மாண்டு போனர். மருத்துவத் துறை கூட விதை நாளக் கருச்சத்து, உப்பு நீரில் (Saline) கரையும் தன்மையுடையதல்லதென்று அவ்வாறு செயற்படுத்தும் முறையை ஒப்புக்கொள்ளவில்லை.

1919 இல் பாரிசு நகரத்தில் நடைபெற்ற *28* ஆம் பிரான்சின் அறுவை மருத்துவப் பேராயக் கூட்டத்தில் மருத்துவர் "சர்சு வோரோ நாப்" (Serge Voronof) என்பவர் முதுமையைத் தவிர்க்கும் முறையொன்றை அறிவித்தார். அம்முறையானது, நல்ல ஓர் இளம் கொடையாளியினுடைய ஆணினப் பாலியற் சுரப்பியை அகற்றி, முதிய வருடைய விதை நாளத்தில் அறுவை மருத்துவ முறையில் ஒட்டுவதாகும். இவ்வொட்டுதல் முடிந்த வுடனேயே புதியவலிமையும், இளமையும், வனப்பும் சுறுசுறுப்பும்

தோன்றத் தொடங்குகின்றன. ஆனால் அதன் பயன் மிகக் குறுகிய கால அளவினதாகவே இருந்தது. மேலும் அறுவை மருத்துவச் செலவுக்கு ஈடு செய்யுமாறும் இல்லை. எனவே இம்முறையும் முயற்சியும் கைவிடப்பட்டன

மூப்பியல் துறையைச் சார்ந்த ஆய்வுகள் அமெரிக்காவில், இப்பொழுது பெருமளவில் மேற்கொள்ளப் பெறுகின்றன. மூப்பியல் நூல் வல்லுநர்கள், மிக விரிவான அளவில் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஏறத்தாழ 40 அல்லது 50 ஆண்டுகட்கு இயக்கு நீர் ஊசி (Hormone Injections) முறைகளும், உகர்ட் (Yogurt) உணவு முறைகளும் நடைமுறையில் இருந்ததைப்போல், மூப்பியல் நூல் வல்லுநர்கள், அனைத்து நோய் மருந்தொன்றை (Panacea) தேடிக்கொண்டிருக்கவில்லை. இப்பொழுது எந்தஒரு பேரளவிற்காவது வாழ்நாளை நீட்டிக்கலாம் என்னும் நம்பிக்கையைப் பெற்றிருக்கின்றனர்கள். மருந்துச் சரக்குகள், அம்மைப்பால், அறுவை மருத்துவக் கலைநுணுக்கத் திறம் இவையாவும் பெருக்கமுற்ற முன் நூற்றாண்டுகளில் குறிப்பிடத்தகுந்த வகையில் முதுமை யடைந்தவர்களுடைய எண்ணிக்கையை மிகுதிப்படுத்தின. ஆனால் முதுமை எய்தியவர்களுடைய எதிர்கால வாய்ப்பு வளத்தை மிகைப்படுத்தவில்லை. ஆகவே, இத்துறையில் ஒருமுகப்பட்ட பணியினை அமெரிக்க நாடு மேற்கொண்டுள்ளது.

இவ்வுடல் நோய்களாலும், எதிர்பாராமல் ஏற்படுகின்ற ஏதங்களினாலும் (Accidents) வெப்ப அளவின் உச்ச நிலைகளினாலும், சூழ்நிலைகளினால் ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களினாலும் மிகையாக ஆட்படும்பொழுது இறப்பிற்கான வாய்ப்பு எந்நேரத்திலும் விரைவுபடுத்தப் படுகின்றது. இன்னும் இவ்வுடல் நாளுக்குநாள் மிகச் சிறிதளவாக இறந்து கொண்டு வந்தபோதிலும், உண்மையாக இப்பொழுது இயங்கி முடிவுறுவதைவிட, மிக நீண்ட காலத்திற்கு, இளமையோடிருக்கின்ற முறையில் அமைக்கப் பெற்றிருக்கின்றது

உடலின் மிகையான உறுப்புகளும், குறுதியின் செவ்வணுக்கள் போன்றவையும், இடைவிடாது புதுப்பிக்கப் பெறுகின்றன. மற்ற உறுப்புகள், பழுதுறும்பொழுது, தாமாகவே பழுது பார்த்துக் கொள்ளும் குறிப்பிடத்தக்க அரிய ஆற்றலைப் பெற்றிருக்கின்றன.

புதிய உயிரணுக்களைத் தோற்றுவிக்க இயலாத நிலையில், நரம்புகளும் (Nerves) தசைநார் இழைமங்களும் (Tissues) - இருந்த போதிலும், ஓர் உயிரினத்தின் இயல்பான வாழ்நாட் பேரெல்லைக்கும் (Normal Life span) மேலாக, அவை பயன்படுமாறு அமைந்து கிடக்கின்றன. இருப்பினும், மாந்தன் விரைவிலேயே, முதுமைக்கு ஆளாகி, உரிய வாழ்நாட் பேரெல்லையை அடையுமுன்னரே மாண்டு போவதற்குக் கரணியங்கள் எவையாக இருக்கக்கூடும் ? இவ்விடத்தில் தான மூப்பியலின் அடிப்படைக் குறிக்கோள் எதுவாக இருக்கக்கூடும் என்பதை அறிதல் வேண்டும். இவற்றில் மிகச் சிறந்த துணைக் கூறுகள் மூப்பியல் நூல் வல்லுநர்களால் வெளிப்படுத்தப் பெற்றுள்ளன.

[1] தோற்றத்தைச் சார்ந்த, மரபுவழிப் பெறுகின்ற, நெடிய வாழ்நாள் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. நீண்ட காலம் வாழ்ந்த பெற்றோர்கட்குப் பிறந்த மக்கள், குறுகிய காலம் வாழ்ந்திறந்த பெற்றோர்களின் மக்களைக் காட்டிலும் நீண்ட எதிர்கால வாய்ப்பு வளத்தைப் பெறுகின்றனர்.

[2] மிகக் குறைவாக உண்ணும் பழக்கம் முதுமையை விரைவுபடுத்துகின்றது.

[3] காமா (Gama) என்னும் சிற்றலை ஒளிக்கதிர், காசுமிக் (Cosmic) என்னும் மின் காந்த நுண்ணலைக் கதிர் இவை உடலில் ஊடுருவதால் வாழ்நாள் குறைவுறுகின்றது. மருத்துவம், பல் இவற்றிற்கான புதிர்க்கதிர் ஆய்வு நிகழ்ச்சிகள் கை மணிப் பொறியின் ஒளியுமிழ்கின்ற முகப்பு, இவற்றிலிருந்து சிதறுகின்ற கதிர் வீச்சுகளின் குவிப்பைத் தவிர்ப்பதென்பது இயலாது.

[4] உயிரணுவில் உள்ள சில கருநிலையான (Vital)பொருள்கள் புதுப்பிக்கப் பெறுவதைவிட, மிக விரைவாகச் செலவழிக்கப் பெறுவதாலோ அல்லது படிப்படியாக இழக்கப் பெறுவதாலோ அல்லது முழுவதும் பயன்படுத்தப் பெறுவதாலோ முதுமை உண்டாகின்றது.

[5] உடலிலேயே உள்ளீட்டுப் போர் (Civil war) நிகழ்கின்றது. உயிரணுக்களில் தம் நிலையினின்றும் பிறழ்ச்சி ஏற்படுகின்றது. அது நுண்ணிய, தொற்றுநோய்க் காப்பமைப்பைத் தூண்டுகின்றது;

நுண்மங்கள் (Bacteria) நச்சுநோய் நுண்மங்கள் (Viruses) மற்ற படையெடுக்கின்ற நுண்ம உயிரினம் இவற்றிற் கெதிராகப் போராடுகின்றது. பின்பு உடலின் காப்புக் கருவியாகப் பயன் பட்டவையே, எதிர்த்துப் போராடிய உயிரணுக்களுக் கெதிராக மாறிவிடுகின்றன.

[6] சில உயிரணுக்கள் ஊன்ம ஆக்கச் சிதைவு மாறுபாட்டில் (Metabolism) ஏற்படும் சாம்பற்கட்டி (Clinkers) என்னும் கரையாத கழிவுப் பொருளினால் தடுப்புக்கு ஆட்படுகின்றன. உயிரணுக்களின் இயக்கத்திற்கு இவை பெருந்தடையாக உள்ளன.

[7] மீண்டும் அமையவியலாத உயிரணுக்களில் சில அன்றாடம் இறந்து போகின்றன. உண்மையாகவே இவை ஒருநாளில் பத்தாயிரக் கணக்கில் மீண்டும் பயன்படாதிறந் தொழிகின்றன.

[8] உடலின் இணைப்பு இழைமத் தொகுதி (Connective Tissues) கந்தகமூட்டி வலிவாக்கப் பெற்ற இழுவை (Vulcanized Rubber) போன்று ஆகிவிடுவதால், ஊட்டச் சத்தை உயிரணுக் களுக்கு வழங்குவதற்கும்,கழிவுப் பொருள்களை வெளியேற்றுவதற்கும் இடையூறாக இருக்கின்றது

[9] உயிரணுவின் செயலொழுங்கில் குறுக்கிடுகின்ற, நச்சுத் தன்மையையும், தீங்கையும் விளைவிக்கின்ற பொருள்கள் அதன் உள்ளும் புறமும் படிப்படியாகச் சேர்ந்து விடுவதால் முதுமை நிலை உண்டாகின்றது.

[10] உடலில் உள்ள சூழ்நிலைப் பொருள்களில் படிப்படியாக மாற்றம் ஏற்பட்டு, நீர்மத் தன்மையில் நிலையான இழப்பு ஏற்பட்டும் குறைவு நேர்கின்றது. உடலின் பல்வேறு அமைப்புகளின் மென்மையும் நெகிழ்வும் குறைந்து வன்மையாக ஆகின்றது. இவை, முதுமைக்கு அடிப்படையான சிறப்புக்கூறுகளாகின்றன. எடுத்துக் காட்டாக, குடலுறுப்புகளின் உட்புறத்திலுள்ள சளித்தன்மையுள்ள சவ்வுப் பகுதிகள் வலிமை இழக்க இழக்க முதுமை எய்துகின்றதைக் கூறலாம்.

[11] உடல் வாழ்நாள் முழுமையும் தொடர்ச்சியான ஏதங்கட்குக் (Accidents) காப்பின்றி விடப்படுகின்றது. சான்றாக நுரையீரல்

காய்ச்சலின் (Pneumonia) நோய்வீச்சு (Bout), கால் முறிவு, ஒரு கடுமையான தீப்புண், அல்லது மிகப்பெரிய உணர்வழுத்தமுடைய காலம் இவற்றைக் கூறலாம். இவற்றினுடைய கூட்டுப் பயன் முதுமையை விரைவு படுத்துகின்றது.

முதுமை எய்துதலானது உயிர்வாழ் இனங்களில் எதிரிடையான மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றது. கீழ்க்காணும் இழப்புகட்குப் பல்வேறு வகையான உடலுறுப்புகள் ஆட்படுகின்றன.

1. தோல்:- ஈரத்தன்மையின் இழப்பு வறட்சியையும், தோலுரிதலையும் உண்டாக்குகின்றது. அரிப்பும், கேடுபயக்கும் தேவையற்ற வளர்ச்சியும், நேர்கின்றன. தோலினடியில் உள்ள கொழுப்புப் பொருள்களின் இழப்பு, முதுமைத் தோற்றம், வறட்சி, மஞ்சள் நிறத்தோற்றம் இவற்றைத் தோற்றுவிக்கின்றது. தோலின் நெகிழ்வுத் தன்மை இழப்பால் தோற் சுருக்கங்கள் உண்டாகின்றன மயிர் நரைத்தலும், உதிர்தலும் நேர்கின்றன. மயிர்ப்பையின் நெய்மச் சுரப்பாற்றல் குன்றுகின்றது.

2. காது:- செவிப் புலன் இயைபு 10ஆம் அகவையில் உச்ச நிலையில் செயல் படுகின்றது. அதன் பிறகு ஆண்டுதோறும் படிப்படியாக ஒலியேற்பு உணர்வு குறைந்து கொண்டே வருகின்றது.

3. கண்கள்:- 35 அல்லது 40 ஆம் அகவையில் கண்களின் வில்லைத்தொகுதி (Lens) யின் நெகிழ்வுத் தன்மையும் ஒளி ஏற்பு ஆற்றலும், பார்வையின் கூர்மையும் குறைவெய்துகின்றன.

4. முகர்வுணர்வும், சுவையறியுணர்வும்:- 60ஆம் அகவைக்கு மேல் குறைவுறத் தொடங்குகின்றன.

5. தசைநார் இழைமங்கள்:- இவற்றின் வலிவாற்றல் 25ஆம் அகவை முதல் 30வரை உச்சநிலையில் உள்ளது. பின்பு படிப்படியாகக் குறைவுறுகின்றது. 60 ஆம் அகவையில் பாதி அளவு ஆற்றல்தான் இருக்கும் எனக் கணக்கிடப் பெற்றுள்ளது.

6. நெஞ்சாங்குலை:- முதுமை எய்துதலானது நெஞ்சாங் குலையில் வறட்சியையும், விறைப்பையும், அளவில் சுருக்கத்தையும் உண்டாக்குகின்றது. உயிரணித் தொகுதிகட் குட்புறத்தில் ஊன்ம

ஆக்கச் சிதைவு மாறுபாட்டில் உண்டாகும் சாம்பற் கட்டிகள் (Ashes of Metabolic Fire) சேர்கின்றன. நெஞ்சாங்குலே வீங்குகின்றது. கொழுப்புப் பொருள் மிகுகின்றது. அதனுடைய அடைப்பிதழ்கள் (Valves) தொய்வுத் தன்மையை இழக்கின்றன. முதுமை நாட்களில், வேலைப்பளுவினால் ஏற்படும் அயர்வைப் போன்ற களைப்புணர்வு உண்டாகின்றது.

7. குருதிக் குழாய்கள்:- நெகிழ்வுத் தன்மையை இழக்கின்றன. அவற்றினுடைய உட்புறச் சுவர்களில் சுண்ணும்புப் பொருள்கள் தேங்குகின்றன கரடு முரடான பகுதிகள் உண்டாகின்றன. அவற்றில் பளிங்கு போன்ற கரையும் இயல்பில்லாத பொருள்களும் தேங்கிக் குருதிக் குழாயினுள் அடைப்பை ஏற்படுத்துகின்றன.

8. எலும்புகள்:- சுண்ணும்புச் சாரம் குறைவுபடுதலால், வலிவிழப்பும், நொய்மையும் மிகுகின்றன. அதனால் எலும்பு முறிவும், மூட்டு நழுவுதலும் ஏற்படுகின்றன. பெரும்பான்மையான இணைப்பு இழைமத் தொகுதிகள் (Connective Tissues) சுருக்கத்தையும், கடினத் தன்மையையும் எய்துவதால், முதுகந்தண்டை வளைந்து உடலின் மேற்பகுதியைக் கூனும்படி செய்கின்றன.

9. இணைப் புறுப்புகள்:- இணைப்பு இழைமத் தொகுதிகளின் அமைப்பில், ஊன்ம ஆக்கச் சிதைவு மாறுபாட்டின் விளை பொருள்கள் சிறுநீர்க் காடியாகக் குவிந்து போவதனால் மூட்டுகளில் வலியுணர்வு தோன்றுகின்றது.

10. வயிறு:- தன் கொள்ளளவில் குறைவுறுகின்றது.

11. குண்டிக் காய்கள் (Kidney) :- வடிகட்டும் தன்மை குறைவுறுகின்றது. சிறுநீர்ப் பையின் அளவும் குறைந்து போகின்றது. குண்டிக் காய்களைச் சார்ந்த குருதி அழுத்தத்தை ஏற்படுத்தும் நிலைமைக் காளாகின்றது.

12. நுரையீரல்கள் (Lungs) ;- இயக்க முறைமையிலும், ஆற்றலிலும் குறைவுறுகின்றது.

13. மூளை (Brain) :- வலிவோடும் ஆற்றலோடும் மிக நீண்டகாலம் உழைக்கக் கூடிய உறுப்பு. உளநலம் மிக மிக மெதுவாகவே குறைவுறத் தொடங்குகின்றது. முதுமைப் பருவத்தின்

இறுதிக்காலம் வரையிலும் பழுதின்றிப் பணியாற்றக் கூடும். முதுமை எய்துவதால் மூளையின் உயிரணுக்களில் இழப்பு ஏற்படுகின்றது. ஊன்ம ஆக்கச் சிதைவு மாறுபாட்டினுல் ஏற்படும் சில துணை விளைவுகள், உயிரணுக்களில் அடைப்பினை ஏற்படுத்துகின்றன. அதனுல் அண்மையச் செய்திகளைக்கூட மறந்துபோகும் அளவிற்கு நினைவாற்றல் குறைந்து போகின்றது.

14. பெண்ணின் கருவகம்:- மெலிந்து வலிவிழந்து போகின்ற நிலை ஏற்படுகின்றது. 40 அல்லது 50 அகவையில் சினை முட்டை-யைத் தோற்றுவிக்கும் ஆற்றலை யிழக்கின்றது. வாடிச் சுருங்கு கின்றது. நார் இழைமத் தொகுதியாக மாறுகின்றது. சுரப்பிகள் இயக்கு நீரைச் சுரப்பிப்பதை நிறுத்தி விடுகின்றன.

15. விதை நாளம்:- (ஆண் சுரப்பி) மேற்குறித்தவாறு கால அளவு ஆண்களுக்கு இல்லை. ஆண்களில் இதனுடைய இயக்க வீழ்ச்சி மிக மிக மெதுவாகவே அமைந்துள்ளது 60-ஆம் அகவையில் விதை நாளத்தின் அளவு குறைவுறுகின்றது. கருவளம் குறைந்து போகின்றது. ஆயினும் பாலுணர்வு தொடர்ந்து நீடிக்கின்றது.

16. கேடயச் சுரப்பி:- கழுத்தின் நடுவே அமைந்துள்ளது. அளவில் குறைவு ஏற்படுகின்றது. ஊன்ம ஆக்கச் சிதைவு மாறு பாட்டிலும் குறைவு உண்டாகின்றது.

17. குண்டிக்காய்ச் சுரப்பிகள் (Adrenals) :- குண்டிக்காய் களின் மேற்புறத்தில் அமைந்துள்ள முதுமையில் கேடுறுகின்றன.

18. கழுத்துக்கணையச் சுரப்பி (Thymus):- மார்புக் கூட்டிற் குள், மார்பு எலும்பின் பின்புறம் அமைந்துள்ளது. ஒருவரின் வளர்ச்சிக்கால முடிவில் மறைந்து போகின்றது. 25 அல்லது 30 ஆம் அகவையில் முற்றிலும் மறைந்து போகின்றது.

19. மூளையடிச் சுரப்பி (Pituirutory Glands).- ஊன்ம ஆக்கச் சிதைவு மாறுபாட்டையும், உடலின் வளர்ச்சியையும் ஒழுங்குபடுத்துதல் இதனுடைய வேலையாகும். முதுமையுறுதல் இதிலும் மாறுதலை உண்டாக்குகின்றது. இஃது உடலின் உயிராற்றல் ததும்பும் வேதியல் பொருள்களின் களஞ்சியம்.

மேற்குறித்த இழப்புகட்கு உடலுறுப்புகள் ஆட்பட்ட போதிலும், ஒருசில இன்ப நலம் பயக்கும் அறிவு நலன்களை மாந்தன் முதுமையில் பெறுகின்றான். படிப்படியான முதிர்ச்சி மாந்த வாழ்வில் இனிமை மையத் தருகின்றது. பகற்பொழுதின் மாலை நேரத்தைப் போன்று வாழ்க்கையின் முதுமைப் பருவம் பல்வகையானும் இனிமை நலம் பயக்கின்றது. கனிந்த முதுமை அகவையில் நாம் மிகவுயர்ந்த, முழுமையான உள, உணர்வு அமைப்புகளைப் பெறுகின்றோம்.

கூர்ந்து எண்ணுகின்ற பழக்கத்தை மேற்கொள்ளுதலும், அகவழிபாட்டில் ஈடுபடுதலும், புதிய அறிவாற்றலைப் பெறுதலும், மிகையான மகிழ்ச்சியை முதுமைக் காலத்தில் ஒருவற்குத் தருகின்றன. சிறந்த பட்டறிவும், மிகையான அறிவாற்றலும் பொருளறி திறனும் சமநிலைத் தீர்ப்பாற்றலும், கவனமும், எச்சரிக்கையும். மிகைப்படுத்தப் பெற்ற உணர்வமைதியும், பாலியல் விழைவுடன் கூடிய உடலியல் உணர்வுகளின் தணிவும் முதுமைக் காலத்தே ஒருவர் பெறுகின்ற நலன்களாகும்.

வாழ்நாட் பேரெல்லை (Life Span) என்பது ஒரு குறிப்பிட்ட உயிரினத்தின் சராசரி ஒருயிரி தகுதியான நிலையில், இயல்பாக உயிர்வாழ்ந்து, மடிந்துபோகும் கால அளவாகும். வாழ்நாட் பேரெல்லைக்கு ஓர் எல்லை குறிப்பிடுவது இயலாத தொன்றாகும். மிக நல்ல நன்னிலை வாழ்க்கையின் வழி வாழ்வை முடிவில்லாது நீட்டித்துக் கொள்ளலாம். உயிர் முறிக்குழுமப் புள்ளி விளக்கத் தொகுப்பாளர்கள் சராசரி வாழ்நாள் அளவை, மிகப் பெரிய பல்வேறு வகைக் குழுக்களைச் சார்ந்த மக்களின் இறப்பு அகவைகளை ஒன்றாகக் கூட்டி அவர்களின் எண்ணிக்கையால் வகுத்துப் பெறுகின்றனர்.

வாழ்நாட் பேரெல்லை பற்றியும், உயிர்வேதியல் கொள்கை பற்றியும் அறிஞர் பெருமக்கள் பல்வேறு வகையான கருத்துகளை வெளிட்டுள்ளனர்.

1. எலி மெட்கின் காஃப், அலெக்சாண்டர் யோகோ மேலட்சு என்னும் உருசிய அறிவியலறிஞர்கள் "இயல்பான வாழ்நாளின் அளவு 125-இல் இருந்து 150 ஆண்டுகள் வரை ஆகும். அதற்கு ஓர் எல்லை குறித்தல் இயலாது. நாம் முதுமையடையத் தேவையில்லை. நல்ல முறையில் வளர்ந்தால் முதுமை அணுகாது. நலக்குறைவே முதுமை

அடைதலுக்கு வழி வகுக்கின்றது. அதனின்றும் தப்புதல் அரிது. முதுமை நிலை அடைதல் இயல்பற்ற உரிய காலத்திற்கு முற்பட்ட இயல் நிகழ்ச்சி. அதற்கு எதிராக ஒவ்வொருவரும் போராடுதல் வேண்டும். முதுமை அடைதல் தவறான வழி வாழ்க்கையின் முடிவு. அது துன்பங்களும் பழுதுறும் தன்மைகளும் மிகுவதால் ஏற்படு கின்றது'' என்று கூறுகின்றனர்.

2. பெர்னார்டுசா, ''மாந்த இனம் தம்முடைய உள்ளாற்ற லுக்குத் தகுந்தாற்போல் வாழ்நாட் பேரெல்லையைப் பெற்றிருக் கின்றது.'' எனக் கூறியுள்ளார்.

3 சேக்சுபியர், 'வாழ்க்கை ஓர் எரியும் மெழுகுத்திரிக்குச் சமமாகும். உயிர் வாழினங்கள், தாங்கள் அசைவதினாலும், அதன் வழி ஏற்படுகின்ற சூட்டினாலும் ஆற்றலைத் தோற்றுவிக்கின்றன. வாழ்நாள் அளவு தங்களுடைய எடையையும், உயிர்மப் பொருண்மை இவற்றின் நீட்சிகட்கிடையேயுள்ள தொடர்பு நிலையையும் பொறுத்து அமைகின்றது. மெழுகுத்திரி எரியும் கால அளவு அதனுடைய எரியும் விரைவைப் பொறுத்துள்ளது. அதனுடைய ஊன்ம ஆக்கச் சிதைவுப் பொருள்களாலேயே அஃது அணைந்து போகக் கூடும்.'' என்று குறிப்பிட்டுள்ளார்.

4. மருத்துவர் நாதன் சாக்கு:- உடலின் உய்விற்குத் தேவை யான சமநிலை ஆற்றலின் இன்றியமையாமையை வலியுறுத்து கின்றார், இந்த அமெரிக்க அறிவியலறிஞர். அவர் கூறுவதாவது:– ''உடலின் பல்வகையான இயல் நிகழ்ச்சிகளின் இயக்கங்களை ஒரு குறிப்பிட்ட அளவில் இருக்குமாறு கட்டுப்படுத்தும் உள்ளாற்றல் உடலுக்கு உண்டு. வெப்ப நிலை, காடித் தன்மை, காரப் பொருள் தன்மை காரத் தன்மைக்கு எதிர்நின்று சமப்படுத்தும் பொருள். மின் பகுப்பியல் சரியீடு, உடலியல் நீர்மச் சரியீடு, குருதியில் சுழற்சி பெறுகின்ற, பல்வகையான இயக்கு நீர், உயிர்வளி ஆகியவற்றின் அளவு நிலைகள் குறிப்பிடத்தக்கனவாகும். முதுமை முதிர முதிர உடலின் உள்ளியல் ஆற்றல் குறைவுறுகின்றது. பயன் சிதைவும் ஏற்றத் தாழ்வும் மிகுகின்றன. குருதிப் போக்கினைத் தடுத்து நிறுத்தும் இயக்க முறைமை பழுதுறுகின்றது''

(தொடரும்)

மடக்கை (Logarithm)

இல. க. இரத்தினவேல், அறி. இ.

.3703 என்ற மடக்கையின் எண் மதிப்பு 2.346

.0987 என்ற மடக்கையின் எண் மதிப்பு பட்டியலில் 1255 ஆம்.

குணகம்	0	(0·0987)	எனில்	எண்மதிப்பு	1·255
,,	1	(1·0987)	,,	,,	12.55
,,	2	(2·0987)	,,	,,	125·5
,,	5	(5·0987)	,,	,,	125500
,,	$\bar{1}$	($\bar{1}$.0987)	,,	,,	0.1255
,,	$\bar{2}$	($\bar{2}$.0987)	,,	,,	0·01255
,,	$\bar{5}$	($\bar{5}$.0987)	,,	,,	0·00001255

கல்லூரிக் கணக்குப் பாடம் படிக்காதவருக்கும், உயர் நிலைப் பள்ளி மாணவர்க்கும் பிறர்க்கும் எளிதில் புரிவதற்காக ஓரெண்ணின் மடக்கையையும் எதிர் மடக்கையையும் காணும் வகையினை விரித்துக் கூறினோம். எனினும் புரிந்துகொண்டபின் பழக்கத்தில் இம்முறை சில நொடிப் பொழுதில் எளிதில் செய்ய இயலுவ தொன்றே.

மட.க்கைக் கணித முறைகள் எளிதில் புரிவதற் கேற்றவாறு சில மூகாமைக் கணக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கணக்கு க.

பெருக்கற் பலன் காண்க : 193×17

எண்	மடக்கை
193	2·2856
17	(+)1·2304
	3·5160

எதிர்மகை 3281.

எதிர் மடக்கையில் குற்றெண் பகுதியான 5160-இன் மதிப்பு ·3281. குணகம் மூன்றுதலால் எண்ணிடம் நான்கிருக்க வேண்டும். எனவே $193 \times 17 = 3281$.

கணக்கு உ.

தலைப்பில் குறித்த கணக்குக்கு விடை காண்க :

$$\frac{70 \times 22 \times 437 \times 0{\cdot}002497 \times (4321)^3}{8769 \times 98765{\cdot}9 \times 0{\cdot}13273 \times 8}$$

தொகுதியின் மடக்கை

எண்	மடக்கை
70	1·8451
22	(+)1·3424
437	(+)2·6405
0·002497	(+)$\bar{3}$·3974
4321	(+)3·6356
,,	(+)3·6356
,,	(+)3·6356
	14·1322
பகுதி மகையைக் கழிக்க	(—) 8·9635
	7·1687

பகுதியின் மடக்கை

எண்	மகை
8769	3.9429
98765 9	(+) 4.9946
0·13273	(+) $\bar{1}$.1229
8	(+) 0 9031
	8 9635

·1687க்கு எதிர் மடக்கைப் பட்டியலில் (எண் மதிப்பு) **1474**, எண்ணிடம் 8 எனில் மடக்கைக் குணகம் 7 என்றேம். வாற்றலை யாக மடக்கைக் குணகம் 7எனில் எண்ணிடம் 8ஆம். எனவே விடை **14740000** ஆகும்.

குறிப்பு :-

பிறைக்கட்டுள் கொடுக்கப் பெற்றிருக்கும் கூட்டற் குறி (+) மேலுள்ள எண்ணுடன் கூட்டவேண்டும் என்பதையும் கழித்தற் குறி (—) கழிக்க வேண்டு மென்பதையும் சுட்டுவன.

கணக்கு ௩.

கூட்டு வட்டியில் $6\frac{1}{4}$ நூற்றுமேனி (%) யாகவும் தனிவட்டியில் **7%** யாகவும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தொகை இடப்படுகிறது. எவ்வட்டி முறை ஊதிய முடையதாகும் ?

தொகை உருபா 100 எனக் கொள்வோம்.

$$\text{தனிவட்டி} = \frac{\text{அசல்} \times \text{வட்டி நூற்றெண்} \times \text{ஆண்டெண்ணம்}}{100}$$

$$= \frac{\text{அ} \times \text{நூ} \times \text{எ}}{100} \qquad \left[\frac{P\,R\,N}{100}\right]$$

$$= \frac{100 \times 7 \times 5}{100} = 35 \text{ உருபா.}$$

கூட்டு வட்டியில் கூட்டுத் தொகை,

$$\text{கூ} = \text{அ}\left(1 + \frac{\text{நூ}}{100}\right)^{\text{எ}} \qquad A = P\left(1 + 1\frac{R}{100}\right)^{N}$$

$$= 100\left(1 + \frac{6\frac{1}{4}}{100}\right)^5 \qquad = 100\left(1 + \frac{25}{400}\right)^5$$

$$= 100\left(\frac{425}{400}\right)^5$$

$$= \text{மகை } 2{\cdot}1315$$

$$= 135{\cdot}40$$

கணக்கீடு.

$$\text{மகை } 100 \times \left(\frac{425}{400}\right)^5 = \text{மகை}100 + \text{மகை} \left(\frac{425}{400}\right)^5$$

$$= \text{மகை } 100 + \left\{5 \times \text{மகை} \left[\frac{425}{400}\right]\right\}$$

எண்	மகை.
425	2·6284
400	2.6021
	0·0263
(5படி)	×5
	·1315
100	2·0000
	2 1315

கூட்டுத் தொகையில் அசல் உருபா 100 ஐக் கழிக்கக் கூடிய வட்டி மட்டும் உருபா 35·40

கூட்டு வட்டி முறையில் தனிவட்டி முறையை விட 40 காசுகள் மிகுவதால் கூட்டு வட்டி முறையே ஊதிய முடையதாகும்.

கணக்கு ௮

ஒரு நுண்குழலில் 27·5 செ. மீ நீளமுள்ள தொடர்பறுத இதள் இழையின் நிறை 1.923 சீரெடை (gram). இதளின் அடர்த்தி க. செ. மீட்டருக்கு 13.6 சீரெடை என்றால் குழலின் ஆரம் என்ன ?

$$\text{பருமம்} = \frac{\text{நிறை}}{\text{அடர்த்தி}}$$

நுண்குழலின் உட்கொண்மை = இதளின் பருமம்

$$\pi \times \text{ஆரம்} \times \text{ஆரம்} \times \text{நீளம்} = \frac{\text{இதளின் நிறை}}{\text{அடர்த்தி}}$$

$$(\text{ஆரம்})^2 = \frac{\text{நிறை}}{\pi \times \text{நீளம்} \times \text{அடர்த்தி}}$$

$$\text{ஆரம்} = \sqrt{(\text{ஆரம்})^2} = \sqrt{\frac{\text{நி}}{\pi \times \text{நீ} \times \text{அட}}}$$

$$= \left(\frac{\text{நி}}{\pi \times \text{நீ} \times \text{அட}}\right)^{\frac{1}{2}}$$

$$\text{மதிப்புகளை இட, ஆ} = \left(\frac{1.923}{\pi \times 27{\cdot}5 \times 13{\cdot}6}\right)^{\frac{1}{2}}$$

இதற்கு மடக்கை எடுத்தால்

$$\text{மகை (ஆ)} = \text{மகை} \left(\frac{1.923}{\pi \times 27{\cdot}5 \times 13.6}\right)^{\frac{1}{2}}$$

$$= \frac{1}{2}\ \text{மகை} \left(\frac{1{\cdot}923}{\pi \times 27{\cdot}5 \times 13{\cdot}6}\right)$$

கணக்கீடு:

எண்	மகை	
1·923	0·2840 — (1)	
π	0.4971	[தனியாகக் கண்டது]
27·5	(+) 1.4393	
13·6	(+) 1·1335	
	(−) 3·0699 — (2)	
	$\bar{3}$·2141	

(1) இலிருந்து (2)ஐக் கழிக்க

$$\text{மகை (ஆ)} = \frac{1}{2} \times \text{மகை} \left(\frac{1{\cdot}923}{\pi \times 27{\cdot}5 \times 13{\cdot}6}\right)$$

$$= \frac{1}{2} + \bar{3}.2141$$

$$= \frac{1}{2} + \bar{4}.12141$$

$$= \bar{2}.060705 \text{ அல்லது } \bar{2}.0607$$

எனவே ஆரம் = 0 01150 செ. மீ.

குறிப்பு :- [அ] 0·2840 இலிருந்து 3·0699 என்ற பெரிய எண்ணைக் கழிக்கும் போது சிறிய எண்ணுடன் வேண்டிய எண்ணை (3)க் கூட்டிக் கழித்து விடைகாண வேண்டும்.

[உ] $\bar{3}.2141$ எனவரும் கோட்டெண் மடக்கை வகுக்க விய லாததாக இருப்பதால் வகுபடுமாறு அதனுடன் தக்க எண்ணைக் கூட்டிக் கழிக்கவேண்டும்.

சென்ற ஆண்டு(1970) வெளியிடப்பட்ட புகுமுக வகுப்புக் கணிதப் பாடப் பொத்தகங்கள் ஒன்றில் மடக்கைப் பகுதியில் மட்டும் பயன் படுத்தியுள்ள தமிழ்க் [கெ]க[ா]லைச் சொற்களுள் சில: பிரசித்தம், நிருபி, தசமஸ்தானம்; நியமருபம், பிரதி ஸ்தானங்கள், நிர்ணயம், ஜதை, வித்தியாசம் முக்கியத்துவம். ருண எண், தனராசி யெண், இவ்வாசிரியருடை தமிழ்ப் பற்றும் அறிவும், லாகிருதத்தை, இலாகரிதம் என்றும், முக்கோணவியலை [Trignometry]த் திரிகோணமிதி எனத் திரிப்பதிலும் தான் உள்ளன.

ஆங்கிலத்தில் படிப்பது புரியாதிருப்பதனுல் கல்வி வளர்ச்சி தடைப்படுகிறது என்பதற்காகத் தாய்மொழியில் பயிற்றவேண்டு மெனத் தமிழ்ப் பயிற்று மொழித் திட்டத்தைக் கொணர்ந்தால் இவர்கள் எழுதும் என்றும் எப்பொழுதும் யாருக்கும் புரியாத், ருணத்தைவிட ஆங்கிலத்தில் பயில்வது எளிதில்லையா ? மேலும், வழக்கிழந்த பல வடசொற்களை வேண்டுமென்றே திணித்துத் தமிழால் முடியாது எனக் காட்டும் குறும்பன்றோ, இது ! இக்குறும்பு களுக்கு மக்கள் பணம் கொடையாகி மாணவர்களுக்குப் பளு ஏறுகிறது. இதனைக் காணின் பொத்தகம் எழுதியவர் தமிழில் அவற்றுக்கான சொற்கள் இல்லையெனக் கூறக்கூடும். அவரைப் போலவே ஒரு பொத்தகம் எழுதிய வேறிரு ஆசிரியர்கள் இச்சொற் களுள் ஒன்றைக்கூடப் பயன்படுத்தாதது எவ்வாறு ? தனக்குத் தமிழறிவு இல்லாததால் பதினாறு சிறப்புகளையும் உடைய தமிழி

லேயே அறிவுக்குகந்த சொற்கள் இல்லையென்று கூறும் தெருக் கோணற் கூத்தாடிகள் ஆட்டத்துக்கு வரலாமா? ஆட்டம் என்றாலும் வேண்டாதவர்களுக்குக் கெடுதியில்லை. ஆனால் அறிவுப் பயிற்சியில் இத்தகைய மூளை மழுக்கி வேலைகளைச் செய்யவிட்டால் வருங்காலத் தமிழரினம் என்னாவது? இவருடைய பூஜ்யத்தை மேற்குறித்த வேறிரு ஆசிரியர்கள் சுழி அல்லது சுன்னம் என எழுதாவிடினும், பூச்சியம் எனத் தமிழ முறைப்படியாவது எழுதினார்கள், அம்மட்டுமின்றி இவர் எழுதியுள்ள தமிழ் நடை மயக்கந் தருவதாகவே உள்ளது. ஆகையால் மாணவர்களும் பிறரும் இத்தகைய பொத்தகங்களை விலக்க வேண்டுகிறோம்.

தமிழ் வெல்க!

பாவாணர் அறிக்கை.

பல்வகை வாழ்த்து வேண்டியும், பிறசெய்தி வினவியும் அன்பர் பலர் எனக்கு எழுதி வருகின்றனர். அகர முதலித் தொகுப்பில் ஆழ்ந்து ஈடுபட்டிருப்பதால் இனிமேல் ஒருவரும் எனக்கு ஒன்றும் எழுதவேண்டா என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். எழுதின் விடை வராது.



சிங்கைத் தமிழன்பர்க்கு அறிவிப்பு.

திரு. முல்லைவாணனார் சிங்கைத் தமிழன்பரிடமிருந்து தண்டிய (3100 உருபா) தொகையைக் கொண்டு நான் சென்ற ஆண்டு வெளியிட விருந்த "தமிழர்மதம்" என்னும் நூல் வெளியீடு, இடையில் நான் நோய்வாய்ப் பட்டிருந்ததனால் தடையுண்டு போயிற்று. ஆதலால், இவ்வாண்டுதான் வெளிவரும்.

இது பற்றிச் சிலர்க்கேனும் ஐயுறவு உண்டாகி யிருக்கலாம். அதை அறவே நீக்கவும், இவ்வாண்டிறுதிக்குள் நூல் வெளிவந்து விடும் என்பதை வலியுறுத்தவுமே, இதை எழுதலானேன்.

ஞா. தேவநேயன்,
உக, மேழம் 2002.

செ. சொ. பி. பேகரகரமுதலி
உருவாக்க, வெளியீட்டுத் திட்டம்
உறுப்பினர் பட்டியல்.

திருவாளர்கள் :— 1. தாமரை பெருஞ்சித்திரன், *கடலூர்-1.* 2. மா. பூங்குன்றன், *கடலூர்-1.* 3. புலவர் இறைக்குருவன், *மதுரை-10.* 4 இறை. பொற்கொடி, *மதுரை-10.* 5. காளியப்பன் [நாராயணன்] *நெய்வேலி-1.* 6. செ.பன்னீர்ச்செல்வம், *சென்னை-2.* 7. த. வளங்கோ, *புதுவை-1.* 8. செ. சித்தார்த்தன், அறி. இ. [பி எசி] *சென்னை-25.* 9. க.மகிழ்கோ, *புதுவை-5.* 10. திருநாவுக்கரசு, பொ. இ, *வேலூர்-9.*

11. புலவர். சா. அடல் எழிலன், *திருவையாறு.* 12. நா.முத்துக்குமரன், அறி.இ.ஆ.ப., *குளத்துப்பாளையம்,* 13 திருச்சி மாவட்டத்தான், 14. ந. செங்குட்டுவன், *திருச்சி-14.* 15. அருண்மொழியன், *திருச்சி-14.* 16. வே. நா. பொற்செழியன், [வே நா.இரேணுகோபால்] *பெங்களூர்-1.* 17. உணர்வுப் பித்தன், [ஆ.சொக்கலிங்கம்] *திருச்சி-10.* 18. உளங்கவரழகன், *இராசிபுரம்.* 19. நாவை-சிவம் [தமிழ்மகன்] *கீரனூர்.* 20. ச கலியமூர்த்தி, *காவேரிநகர்*

21. வே. மாறன், *பெங்களூர்-21.* 22. சி. பூ. மணி, *பெங்களூர்-21* 23 கா. அப்பாத்துரை, *நடுப்பட்டி.* 24. ச சின்னத்துரை, *நெய்வேலி-1.* 25. அன்புவாணன், [த. கோவிந்தன்], *நெய்வேலி-1.* 26 அ. அருள்நெறி, *நெய்வேலி-2.* 27. ஆ. கருப்பையா. *நெய்வேலி 3* 28. இரா. அப்பாவு, *நெய்வேலி-3.* 29. இரா. பெருந்தேவன், *நெய்வேலி-2.* 30. மு. அறவாழி, *நெய்வேலி-1.*

31. பொன்.-தமிழ்மாறன் [இராமசாமி], *நெய்வேலி-1.* 32. தமிழநம்பி, *அறங்கண்டநல்லூர்.* 33. புலவர் பா.வீரப்பன், *ஆனைமலை.* 34. நா. இளமாறன், *பெரும்பகல்லாக்குடியிருப்பு,* 35. க. மலர்ச்செல்வன் [தனராசன்], *மதுரை-1.* 36. பர். பொ. இளங்கோ, *உக்கரம்.* 37. செ. பெரிய நாடார், *தெற்குச்சூரன்குடி.* 38. சே. கு. அரசங்கோவன், *மேட்டூர் அணை-1.* 39. ஞா. தாமசு, *மணிமுத்தாறு.* 40. கே. பூபதி, *பெங்களூர்-16.*

41. துரை. சம்பத்குமார், க. இ. *ஈரோடு-1,* 42. அறவாழி, *தளவாய்ப்பட்டணம்.* 43. இல. சு. இரத்தினவேல், *திருச்சிராப்பள்ளி-1* 44. சு. திருஞானம், *திருச்சிராப்பள்ளி-1.* 45. கே. ஏ. மணவாளன், *பெங்களூா-5.* 46. இர. பரணன், *பரணம்*

47. மு. வ. பரமசிவம், *நடுப்பட்டி.* 48. ம. சோசு, *உத்தமபாளையம்.* 49. மு. திருநாவுக்கரசு, *அண்ணுமலை நகர்.* 50. சு. இராமசாமி, *கோவில்பட்டி.*

51. ஓ. பிச்சை, *தெற்குத்தெரு, மேலூர்,* 52. இல—வேலரங்கன், *சோமையனூர்* 53. கெம்பீரம், *பெங்களூர்-1* 54. செ. பெருமாள், *சடத்தூர்.* 55. புலவர் வ. அரிஅரன், *ஒண்டிப்புதூர்.* 56. ந. தேவராசன், *வேலூர்-1;* 57. க. செகநாதன், பி. எசி. *ஈரோடு.* 58. செ. இராசமாணிக்கம், *காரைக்குறிச்சிப்புதூர்.* 59. மெ. கிழார். *பெங்களூர்-21.* 60. சா. பொழிலன், *நெய்வேலி-2.*

61. கா. சே. சாத்தப் பிள்ளை, பி. எசி. பி. டி. *ஆமூர்.* 62. புலவர் கா. இளமுருகன் *புன்செய்ப்புளியம்பட்டி,* 63. ப. கு. முருகவேள், *புன்செய்ப்புளியம்பட்டி.* 64. புலவர். ந. அருணன், *எரங்காட்டுப்பாளையம்,* 65. பா. அறவாழி, *சென்னை-7.* 66. அ. வெள்ளிமலையார், *திருச்சிராப்பள்ளி-8.* 67. சாலை. இளந்திரையன், எம. ஏ. எம். லிட், *புதிய தில்லி-5.* 68. செ. வெற்றிவேந்தன் [செயராசன்] *நிலமலைத்தோட்டம்-இராசிபுரம்,* 69. முல்லைவாணன், *சிங்கை.* 70. ந. இராசகோபாலன், *தஞ்சாவூர்-1.*

71. அகத்தி கிருட்டிணன் இ. அ. [வேளாண்], *சோளிங்கபுரம்* 72. ஏ. கே. மணி, பி. இ. எ,. எசு. எசு, I, *பெங்களூர்-38.* 73. வே. ஐயனப்பிள்ளை, *வேம்பனூர்.* 74. வ. கௌரிநாதன், *திருச்சி-14.* 75. எழிலரசன், *திருச்சி-14.* 76. பொன் — தங்கவேலன், *பெங்களூர்-15.* 77. தி. எழிலரசன் [இரமணி], *மதுரை-3* 78 பொன். மாறன் [இராமகிருட்டிணன்], *மதுரை-3.* 79. மறை. நித்தலின்பன். *கோவை-12.* 80. தமிழ்க்கூத்தன், கருந்திட்டைக்குடி,

81. புலவர். ச. தமிழ்வேலன், *மீனாட்சிபுரம்.* 82. அ. இளங்கோ, பி. எசி. பி. டி, *வெருமாம்பாளையம்.* 83. புலவர். த. மாணிக்கம், *கூகலூர்.* 84. புலவர் திரு. மாரி. விசுவநாதன், *வால்பாறை.* 85. பா. வளன் அரசு, க. மு, *திருநெல்வேலி-2.* 86. கரு. பேச்சிமுத்து, *திருச்சி-14.* 87. அ. சாமிக்கண்ணு, *அரூர்,* 88. கே. அரசு, *பெங்களூர்-21.* 89- ந. சுப்பையா, *அருமடல்.* 90. த. சுப்பிரமணியன், *செட்டிக்குளம்.*

(91) த. வையாபுரி, ஆனைமலை, (92) எசு. கே. எசு. காதர், அம்பாலா. (93) இர. சு. கிருட்டிணன், கீழ்த்தென்குலம் (94) அ. மீ. இராமமூர்த்தி, *திருவாரூர்.* (95) வை. வேதையன், திரு—

வாரூர். (96) த சரவணத் தமிழன். திருவாரூர். (97) மா. இறைவன், திருச்சி-14 (98) க. அன்பழகன் கடலூர்-1 (99) பெ. பெருஞ்சித்திரன், கெ கல்லுப்பட்டி. 100) பெ. அன்னகாமு, கெ. கல்லுப்பட்டி

(101 க. நாராயணன், பெரும்பகல்லாக்குடியிருப்பு. (102) வி. இராசமாணிக்கம் எம் ஏ கோயமுத்தூர் 18. (103) மு. கதிரவன், நெமலி. 104) அ கிருட்டிணசாமி, பெங்களூர்-21. (105) துரை-தெட்சிணுமூர்த்தி, மேலச்செம்மங்குடி. (106) க. சிவானந்தன், திருமலைராயன்பட்டினம். (107) அரங்க-திருமாறன், புதூா, உரத்தநாடு. (108) க. அன்புமணி. திருச்சி-15. (109) கரு. நடவரசன் நெய்வேலி-3. (110) இரா. தமிழன்பன், வேப்பங்குறிச்சி.

(111) ப. துரையரசன், கைகாட்டிப்புதூர், (112) கோ. நிலவழகன், க. மு சென்னை-30. (113) க. சி. அகமுடைநம்பி, பி இ., மதுரை. (114) சு. வலங்கைப்பாண்டியன், மதுரை. (115) சி. குமாரசாமி, எல். எம் இ., மதுரை. (116) பொன். இராமானுசம், சுத்தமல்லி. (117) நெல்லை சு, மணியன், திருச்சி-2: (118) முத்து-செல்வன், அலசூர். (119) ஆ. ப. தொல்காப்பியன், மொ. ஆலமரத்துப்பட்டி. (120) இரா. தங்கராசன் மாரம்பாடி.

(121) ப. பெரியசாமி, விருதுநகர். (122) பழங்கரைவேள் பழங்கரை. (123) இந்திய வான்படைத் தமிழன்பர்கள், (124) உ.த.க.பெங்களூர் நகரக்கிளை. (125) செ.தென்னவன், கவுண்டன்பாளையம். (126) காரை-இறையடியான், காரைக்கால். (127) காரை-அலீம், காரைக்கால். (128) தே. நே. சித்திரச்செல்வி, ஆரூர். (129) புலவர். இ. தேவநேயச்சித்திரன்;கீ.அ.செங்கழுநீர்ப்பட்டு. (130) வே. மு. பொதிய வெற்பன், செங்கழுநீர்ப்பட்டு.

(131) ந. அரணமுறுவல், கீ. அ. நாயனூர்பாளையம். (132) த. முத்துக்குமரன், க. இ. பாம்பூர். [133] ஆர். வேணுகோபால், புதுவை-1. [134] இரா. செயராமன், நெய்வேலி-2. [135] திருவாட்டி. வேளாங்கண்ணி உரோசுமரி, தி. அத்திப்பாக்கம் [136] தி. ஆ. சண்முகசுந்தரம், திருச்சி-1. [137] மு இளம்பரிதி, உரத்த

நாடு. [138] ப. இளம்வழுதி, உரத்தநாடு. [139] நா. இள முருகன், அறி. இ. ஆ. ப. நீடாமங்கலம். [140] பி. என். அப்பாசிக் கவுண்டர், காளிங்கராயன் புதூர்.

141. சிங்கை செங்கோடன், அம்மாப்பேட்டை, தஞ்சை. 142. இரா. தமிழ்வாணன், நாயனூர்பாளையம். 143. அ. தங்கராசன், ஈப்போ, மலேசியா. 144. கு. அண்டிரன் நாயனூர் பாளையம். [தெ ஆ] 145 ப. தாயம்மாள் அறவாணன் சென்னை 29. 146 ச. பாண்டியன், ஈப்போ, மலேசியா. 147. பெ. புதுமைப் பிரியன், மலாக்கா. 148. புலவர். ஞா. நன்முல்லை, விரியூர். [தெ. ஆ] 149. இரா. வெற்றியரசு, நெய்வேலி—1. 150. ப. நன்முல்லை, சிங்கை

151. இரா. அருட்குவை, நெய்வேலி-3. 152. அ. குமணன், சிங்கை. 153. இ. எசு சி மூர்த்தி, பெங்களூர்-16 154 துரை-அருண்மொழி, நெய்வேலி 1. 155 செ. மேதலைவன். நெய்வேலி-3. 156. த. செகந்நாதன், அம்பாலாபபடைவீடு. 157. இறைவ ணன், சிங்கபூர். 158 ப தண்டபாணி, கான்பூர 8 159 கே கணபதி, மலேசியா. 160. புலவர். குமர தன்னெளியன், கண்ணமங்கலம். வ ஆ. மாவட்டம்

161 ஏ. செல்வராசு, கான்பூர்-8 162 இ செந்தமிழ்ச்சேய் பொறி. இ., அரசூர்-தெ. ஆ. மாவட்டம். 163 கி சீதாராமகுப்தா உடுமலைப்பேட்டை. 164 ம துரைசாமி. பீனாங்-மலேசியா, 165. எம். ஏ. இளஞ்செலவன் (எம் இரா(ப)) பீனாங்-மலேசியா. 166. பெ. அரசு, மலாக்கா 167 இரா. காளிமுத்து, கோலாலம்பூர்.

—:தமிழ்த் திருமணங்கள்:—

* நெய்வேலித் தென்மொழி அன்பர் திரு இரா வெற்றியரசு பொறி. இ. அவர்கட்கும் திருவாட்டி பூம்பொழில் (சரோசா) அம்மையாருக்கும் பாவலர் உயர்திரு. பெருசித்திரனார் அவர்கள் தலைமையில் 6—6—71 அன்று மதுரை திருமங்கலத்தில் திருமணம் நிகழ்ந்தது. மணமக்கள் பல்வளமும் பெற்று மகிழ நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

* நாயனூர்பாளையம் தென்மொழி அன்பர் திரு. அரணமுறுவல் கீ.அ. - திருவாட்டி கண்ணம்மை ஆகியோர் திருமணம் தென்மொழி ஆசிரியர் பாவலர் உயர்திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் முன்னிலையில் 4—6—1971 கடலூர் தென்மொழியகத்தில் நடைபெற்றது. திருமண நினைவாகத் தென்மொழிக்கு உருபா. 25—00 நன்கொடை அளிக்கப்பெற்றது. மணமக்கட்கு மனமார்ந்த நன்றி கூறி நீடு வாழ வாழ்த்துகின்றோம்.

—அமைச்சர்.



மக்களவை

(ம-115) சூத்திரன் காவி கட்டலாமா?

ஐயா,

கீழ்க்காணும் செய்தியினைத் தங்கள் இதழில் வெளியிடுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

'பிராமணர்கள்' என்று பேதைமையில் தம்மைப் பிறப்பால் உயர்ந்தவராகக் கருதிக்கொண்டு இருக்கும் ஒருசிறு கூட்டத்தார் தமிழகத்தில் சிறு பான்மையினராக இருந்து கொண்டு உயர்தனிச் செம்மொழியாகிய நமதருமைத் தமிழ்மொழியையும் நம் தமிழ்ச்சான்றோர்களையும் இழித்தும் பழித்தும் வந்துள்ளனர். "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தவர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்திற்கு ஒரு நீதி" என்று பாடினார் மனோன்மணீயம் பாடிய தமிழ்ப் பெருமகனார் பெ சுந்தரம்(பிள்ளை) அவர்கள். ஆனால் ஒரு குலத்திற்கு ஒரு'நீதி'கூறும் மனுநூலையே அறநூலாகக் கொள்ளுவோம் என்கின்றனர் தமிழகப் பார்ப்பனர்களும் அவர்தம் தலைவர்களும்.

சில ஆண்டுகட்கு முன்பு காஞ்சி காமகோடிப் பீடம் சங்கராச்சாரியார் "செய்யாதன செய்வோம்; தீக்குறளைச் சென்றோதோம்" என்ற ஆண்டாள் பாடிய ஓர் அடிக்குத், தீமை பயக்கக் கூடிய திருக்குறளை நாங்கள் ஓதமாட்டோம் என்ற பொருள் கூறித், திருக்குறளைப் பற்றிய தம் கருத்தை வெளியிடும் பெரும் பழியைத் தேடிக்கொண்டதோடு ஆண்டாள் பாடிய அடிக்குக் குற்றமான விளக்கம் கூறிப் பெரும் கரிசுக்கும் உள்ளாகி உள்ளார். பார்ப்பனத் தலைவரே திருக்குறளைத் தீமை பயக்கக் கூடியது என்று கருதும்போது ஏனைய பார்ப்பனர்களின் நிலையைச் சொல்ல வேண்டியதில்லை. மேலும் இக் காஞ்சிப் பெரியவரை ஒருமுறை ஒருசிறந்த தமிழறிஞர் (ஆட்சி மொழிக்காவலர் கீ. இராமலிங்கனார்) காணச் சென்றபோது 'சுவாமிகள்' பூசையில் இருந்தாராம். பூசை முடிந்ததும் சென்ற அறிஞர் ஏதோ சில செய்திகளைத் தமிழில் சுவாமிகளிடம் கேட்க அவர் நேரடியாக மறுமொழி கூறாமல் தம் நேர்முக உதவியாளரிடம் 'சமஸ்கிருத பாஷை'யில் கூற உதவியாளர் அதை மொழி பெயர்த்துத் தமிழில் கூறினாராம். சென்றபெரியார் 'சுவாமிகளுக்கு'த் தமிழ் தெரியுமே தமிழிலேயே பேசலாமே' என்று அன்போடு கேட்க,

உதவியாளர் "சுவாமிகள் பூசை வேளையில் நீச பாஷையில் பேச மாட்டார்கள்" என்று மறுமொழி பகன்றனராம். இதிலிருந்து சகத்குருவும் அவர்தம் அடியார்களாகிய பார்ப்பனக் கூட்டமும் தமிழ்மொழியையும் திருவள்ளுவர் போன்ற தனித்தமிழ்ச் சான்றோர்களையும் எவ்வாறு மதிக்கிறார்கள் என்பது தெற்றெனத் தெளிவாகிறதன்றோ? மேலும் இதற்கு அண்மையில் நிகழ்ந்த இன்னொரு சான்றும் கீழே தரப்படுகிறது.

சைவத் திருமடத் தலைவரும் இருமொழிப் புலமையும் சைவ சித்தாந்த மெய்யறிவுச் சிறப்பு உடையவரும் தருமையாதீனத் தமிழ்க்கல்லூரியில் முதல்வராக இருந்தவரும் எங்கள் குருவுமாகிய தவத்திரு ஞானப் பிரகாச அடிகளார் அவர்கள், வட ஆர்க்காடு மாவட்டம் மூக்கூர் என்னும் சிற்றூரில் வீட்டை மடமாக்கிக் கொண்டவரும் பெரிய மடம் உடையவரும் அகோபிலம் சீயர் என இறுமாந்து இருக்கின்றவரும் ஆகிய திமிர்பிடித்த பார்ப்பானைத் தற்செயலாகக் காணச் சென்றபோது "நீ ஒரு சூத்திரன் உனக்குக் காவி கட்ட அதிகாரம் உண்டா? வேதம் படிக்க அதிகாரம் உண்டா? சங்கராச்சாரி ஒரு வேதம் படித்து ஒரு கழி பிடித்துக் கொண்டிருக்கிறான். நான் மூன்று கழி பிடித்துக் கொண்டிருக்கிறேன் இன்னும் இவை போன்ற பல தடிப்பான பேச்சுக்களைப் பேசி முன்போல் பார்ப்பனச் செருக்குடன் பெரிதும் பேசினார். இதைச் சேலத்தில் தேவாலயப் பாதுகாப்பு மாநாடு நடத்தியவருள் முதன்மையானவராகிய திரு. எம். இராமசாமி (ஐயர்) பி. ஏ. அவர்களும், திரு. இரகுபதி அவர்களும் மற்றும் இருவரும் நேரில் கேட்டிருந்தார்கள்.

இச்செய்தியை எங்கள்குரு நேரிலேயே எங்களிடம் ஒரு மாதத்திற்கு முன்னர் அவிநாசியில் புக்கொளியூர் மடத்தில் கூறினார்கள். இந்நிகழ்ச்சியிலிருந்து கற்றுணர்ந்த சமயச் சான்றோர்களைக் கூட (பார்ப்பனரல்லாத தமிழர்களாக இருந்தால்) பார்ப்பனர்கள் மதிப்பதில்லை என்பது தெளிவாகிறது. இவ்வாறு திமிர்பிடித்து அலையும் இக்கூட்டத்தாரை இனியும் தமிழ்மக்கள் நம்பியிருக்கக்கூடாது. எப்போதும் இவர்களிடம் எச்சரிக்கையாகவே இருப்பதோடு இவர்தம் தமிழ்மொழி தமிழின் எதிர்ப்புக் கொள்கையை அடியோடு ஒழிக்க எல்லா முயற்சிகளும் செய்வோமாக.

இன்னணம்,

கா. இளமுருகன், செயலாளர், மறைமலையடிகள் மன்றம்' பு. புளியம்பட்டி (அ. நி.) கோவை மாவட்டம்.

விடுத்து வைப்பர். அரசே பெரு முயற்சியுடன் அகர முதலித் தொகுப்பில் இறங்கினும் உலகத் தமிழ்க் கருத்தரங்கில் பாவாணரைப் புறக்கணித்தது போன்றே நடந்து கொண்டாலும் வியப்பதற்கில்லை. ஏனெனில் அன்றும் இன்றும் அரசின் பக்கமே இருக்கின்ற பண்டாரகர். சி. இலக்குவனுர் அவர்களுக்கே மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொறுப்பு கிட்டவில்லை எனின், பாவாணர் அவர்கள் தலைமையில் அரசு அகர முதலியைத் தொகுக்கும் என நம்புதற்கு இடமில்லை. அரசு பெருமுதலீடு செய்து தொடங்கினும் வையாபுரித் தெ. பொ. மீ. வழியினர் பயன் கிட்டா வண்ணம் கெடுத்து விடுவர். நாம் 5–ஆண்டுத் தொகை சேர்த்து வெளியிடுவ தற்குள் இந்நிகழ்ச்சிகள் எல்லாம் நிகழ்ந்தாலும் நிகழலாம். அதன் பின்னர் நாம் வெளியிடும் அகர முதலியின் முழுப் பெருமையை உலகப் பல்கலைக் கழகங்கள் விரைவில் உணர்தற்கு வழி இல்லை. பாவாணரின் அறிவாற்றலில் உறுதி மொழியாளர்க்கே அன்றிப் பிறருக்கும் எல்லையில்லா நம்பிக்கை உண்டு. எனவே போலிகைகளை வெளியிடாமல் இருப்பதற்கு எந்த உறுதி மொழி யாளரும் வருந்தார் என நம்புகிறேன். சொற்பிறப்பியல் அகர முதலி என்னுல்தான் தொகுக்க முடியும் என்று பாவாணர் குறிப்பிடு கின்றார். ஆனுல் போலிகைப் படிகள் வந்த பின்னர் எங்களாலும் முடியுமென்று சிலர் கூறத் தொடங்கி விடுவர். பின்னர் பாவாணரின் 50–ஆண்டு ஆராய்ச்சியின் பயன் நாம் நினைக்கின்ற அளவிற்கு தமிழகத்திற்குக் கிட்டாமல் போய்விடும். எனவே அருள் கூர்ந்து போலிகைப் படிகளை இன்னும் 5–ஆண்டுகளுக்கு வெளியிடாதீர்கள் என மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இக் கருத்துக்கள் தவருக இருந்தால் பொறுத்துக் கொள்ள வேண்டு கின்றேன்.

தங்கள் தொண்டன்,

புலவர். சா. அடல் எழிலன், திருவையாறு.

0: 244: உலகத் தமிழ்க் கழகத்தின் இரண்டாவது மாநாட்டு மலரில், தாங்கள் எழுதியுள்ள பாடல் தமிழுடலங்களில் ஓடுங் குருதி களைக் கொதிப்பாகும் தன்மை கொண்டது. தமிழ் வளர்ச்சி பெறவும், தமிழர்கள் தன்மான உணர்வுபெறவும், எதிர்காலத்தே விடுதலை பெறப்போகும் தமிழகத்திற்கும் தாங்கள் ஆற்றும் பணி அளவிடற்கரிது.

இன்று தமிழன் தலைநிமிர்ந்து விட்டான். அவன் உள்ளத்திலே விடுதலைத் தீ பற்றி விட்டது. தமிழ் முடங்கிக் கிடக்கின்ற ஒவ்வொரு துறையையும் மேன்மைப்படுத்த அவன் புறப்பட்டு விட்டான். ஆனுல், ஏனே, நாடகத் துறைமட்டும் இன்னும் தமிழனின் கண்ணிற் படவேயில்லை. பேரா. சுந்தரம் பிள்ளைக்குப்பின் அத்துறையை வளப்படுத்த இன்னும் யாரும் துணியவில்லை. மனேன்மணீயத் திற்குப் பிறகு படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற செய்யுள் வடிவ நாடக நூல் எழுந்ததாகத் தெரியவில்லை. எழுந்தவையும் அதற் கிணையாக இல்லை. எனவே மாணவ ருலகமும், ஆசிரிய வுலகமும் தங்கள் ஒருவரையே முழுமையாக நம்பியிருக்கின்றன என்பதை, நான் பல ஆசிரியர்களின் சார்பாகவும், மாணவர்களின சார்பாகவும தங்கட்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மனேன்மணீயத்தைத் தவிர வேறுநாடகம் தமிழில் இல்லை என்றநிலை நீங்கவும், தமிழனை

(அடுத்த பக்கம் பார்க்க)

பேரெழில் பூணவும், பல்கலைக் கழகப் பட்டப்படிப்பில் நாடக இலக்கியத்திற்கு ஏற்ற வகையில், படிக்கவும் நடிக்கவும் தக்கதான ஒரு செய்யுள் நாடகத்தைத் தாங்கள் படைத்தருளும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். —இரணியன், திருப்பூர்.

0: 245: அன்புள்ள பாவலர் ஐயா, வணக்கம்; வளர்க நலம்

தமிழினம் உய்யத் தோன்றிய இயக்கங்களில் பெரும்பாலானவை தற்கொலை செய்து கொண்டன. எஞ்சி இருப்பவை கடம்மாறிப் போய்க்கொண்டிருக்கின்றன. இனியும் தி.மு.கழகம் தமிழர் உரிமை இயக்கமாகக் கருதப்படுவது பேதைமையிலும் பேதைமையே. அது, தமிழர்களின் அடிமைப் பட்டயத்தை அழுத்தி எழுதும் 'தன்னாட்சி'க் கோரிக்கைக்கே பத்தாண்டுத் திட்டம் போடுகிறது. இதை நினைக்கும் போது எனக்கு 'மனோகரா' திரைப்பட உரையாடல் நினைவுக்கு வருகிறது. அதில் வரும் மருத்துவன், நோயாளி இளவரசனைப் பார்த்து, ''உங்கள் வாணாளும் நீடித்து நோயும் நீடித்து அடியேன் அலுவலும் நீடிக்கவேண்டும்'' என்று பொருள்படக் கூறுவான். தி. மு கழகமும் அடிமைத்தமிழனைப் பார்த்து ''உன் இனவுணர்வும், மொழியுணர்வும் நீடித்து, அடிமை நோயும் நீடித்து, அடியேன் அலுவலும் (பதவியும்) நீடிக்கவேண்டும்'' என்று கூறுகிறாற் போலிருக்கிறது. 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்று வெறுமனே 'விடுதலை'யின் உச்சியில் போட்டுவிட்டு, இராமனைச் செருப்பா லடிக்கவே நேரம் போதாமல் வருந்தும் இராமசாமிப் பெரியவரையும், விடுதலை நோக்கில் நம்புவதற்கில்லை. எனவே தமிழினம் விடுதலை பெற்று நல்வாழ்வு பெறும் வரைக்கும் அல்லது தமிழினம் முழுமை யாக அழிந்து போகும்வரைக்கும் உறுதியோடு - ஈகவுணர்வோடு - கட்டுப் பாட்டோடு பணியாற்றும் ஓரியக்கம் தமிழர்க்கு இப்போது தேவை தொட்டில் முதல் இறுதிக் கட்டில் வரைப் பாட்டிசைத்தே வாழ்ந்த ஓரின விடுதலை, ஒரு பாவலரின் தலைமையாலேயே இயலும் என்பது எனது நம்பிக்கை எனவே. ''தலைவரே, வருக; வழிகாட்ட வருக; 'இப்பணி என் காலத்திலேயே முடியும்' என்ற நம்பிக்கை யுடன் வருக'' என்று பணிவன்புடன் வேண்டுகிறேன்.

—சி. ப. இரும்பொறை, மதுரை-1.

0: 246: ஐயா, இந்தியா முழுமைக்கும் பாடலொன்று இருப்பது போன்று, தீந்தமிழ் நாட்டுக்கு ஓர் அரிய சிறப்பான பாடல் வேண்டாமா? தங்கள் முயற்சியில் உருப்பெறப் பல்லாயிரம் உண்மைத் தமிழன் சார்பாக வேண்டுகிறேன் அது நமது விழாக்களிலும் கூட்டங்களிலும் புழங்கிவிடின் அரசினரும் அதைச்சட்ட மூலாம் பூச முயல்வர்.

''எழுதி எழுதிச் செல்கின்றேன் நான்'' என்ற தமிழ்ச்சிட்டு முகப்புப் பாடல் என்னைக் கலக்கிவிட்டது. உண்மையாகவே எவ்வளவு பயன் கண்டிருக்கிறோம்? மேலோட்டமும் ஆரவாரமும் நிறைந்த இக்கால வாழ்வில், அஞ்சி ஒடுங்கிச் சூம்பிய நஞ்சைக் கக்கும் உள்ளத்தினை மெல்லிய உடுப்புக்களாலும் ஆரவார வெற்றுச் சொற்களாலும் மூடிமறைக்கும் மாந்தனை அருள்கனிந்து அடையாளம் காட்டுங்கள். கி. பெருமாள், உரோசனப்பட்டி